JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர் 14 | இதழ் 01 | மார்ச் 2023 | ஆண்டு சந்தா ₹ 100



உன்னால் இயன்றதை மட்டுமல்ல,
உன்னால் இயலாததையும் செய்ய உன்னை

# பெலப்படுத்துவார்

# INDEX


4 ஏற்ற காலத்தில் உயர்வு

10 பெலப்படுத்தினார்

21 யோசனையில் பெரியவர்!

32 Coffee with பத்திரிக்கையாளர்





இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whats app மூலமாகவோ **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்


வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகுந்த மாற்றத்தைக் கொண்டு வரும் இப்பத்திரிக்கையை நீங்கள் தவறாமல் வாசியுங்கள். நீங்கள் வாசித்தபின் இப்பத்திரிக்கையை உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்!

## 30,000 வாலிபர்கள் கையில் தவழும்

## வாலிபர் உலகம் பத்திரிகை உங்கள் கையில் உள்ளதா?




அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் **சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்!** Mo/ Cheque / DD "Jesus Redeems Youth Ministry" என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும்.

நீங்கள் பணம் செலுத்திய பின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் ரசீதை **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்.


| | |
|---|---|
| A/c. Name | : JESUS REDEEMS YOUTH MINISTRY |
| A/c. No. | : 054100710400515 |
| BANK | : TAMILNAD MERCANTILE BANK LTD., |
| BRANCH CODE | : Prahasapuram, Nazareth |
| BRANCH CODE | : 000054 |
| IFS CODE | : TMBL0000054 |
| MICR CODE | : 627060021 |
| SWIFT CODE | : TMBLINBBTUT |


**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**

நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.

Phone: 04639-353333

Cell:9750955547

youth@jesusredeems.org

www.jesusredeems.com

www.youthworld.in



ஆசிரியர்: மோகன் சி. லாசரஸ் இணை ஆசிரியர்: அவினாஷ் ஆசிரியர் குழு: வயலா | ஜிஷ்யா ரேச்சல் | கிளாடிஸ் | சுமா | கெத்சி கிளார்வின் | சதீஷ் | காலேப் | பெனிட்டா | ஜெயா | ஜாய்லின் ஜான் | ஜெயசீலன்

வடிவமைப்பு: டேவிட்சன் | எபனேசர்



# தலைவாசல்

## அன்பான இளம் நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!

பல சவால்களையும், பிரச்சனைகளையும் எதிர்நோக்கும் போது நம்மை அறியாமலேயே நாம் சோர்ந்து போகிறோம். எதிர்த்து நிற்கவோ, போராடவோ திராணியில்லை என்று பல நேரங்களில் விட்டுக் கொடுத்து விடுகிறோம். **ஆனால் தேவன் நம்மை பெலப்படுத்தும் போது அசாதாரணமான காரியங்களை செய்கிறோம்.** தேவன் ஒரு நபரை ஒரு வேலைக்கோ அல்லது ஒரு பணியை செய்ய ஏவும் போது, அதற்கான **வரைபடத்தை மட்டுமல்லாது அந்த பணியை செய்ய போதுமான பெலத்தையும், சத்துவத்தையும் கொடுக்கிறார்** என்று சொன்னால் மிகையாகாது.

தேவன் நோவாவைப் பார்த்து ''நான் ஜலத்தினால் உலகத்தை அழிக்க போகிறேன், நீ இந்த உயிரினங்களையும், நான் படைத்த விலங்குகளையும் காப்பாற்றி அவற்றை ஆதரிக்க வேண்டும் என்று சொல்லி 300 முழம் நீளம், 50 முழம் அகலம், 30 முழ உயரத்தில் ஒரு பேழையை கட்ட கட்டளைக் கொடுத்தார். பெரிய திட்டத்தின்படி பிரமாண்டமான ஒரு பெரிய கப்பலை நோவா கட்டி முடித்தார். நோவா ஒரு வார்த்தையும் மறுப்பு சொல்லாமல் தன் வேலையை கர்த்தர் சொன்னபடியே செய்து முடித்தார்.






இன்றைய சூழலில் அந்த பேழையின் அளவு 450 அடி நீளம், 75 அடி அகலம், 45 அடி உயரம். பார்ப்பதற்கு ஒரு Football Courtயை விட பெரியது. நோவாவின் பேழைக்குள் 20 Tennis Court மற்றும் 35 Basketball court வைக்கும் அளவிற்கு பெரியதாய் இருந்தது. அதன் உயரம் ஒரு மூன்று மாடி கட்டிடத்திற்கும் உயரமாய் இருந்தது. இவ்வளவு பெரிய வேலையை நோவா எப்படி செய்தார்?

அமெரிக்காவில் உள்ள Kentucky என்ற இடத்தில் நோவா பேழையை போல் ஒரு மாதிரியை செய்துள்ளார்கள். பல பில்லியன் டாலர் செலவு செய்து Modern Equipment பயன்படுத்தி செய்துள்ளார்கள். ஆனால் நோவாவின் நாட்களில் ஒரு வசதியும் இல்லாமல் இந்த பிரமாண்டமான பேழையை செய்தார்.

காரணம், தேவ திட்டத்தை செய்வதற்கு தேவன் கொடுத்த பெலன். தேவன் ஒவ்வொரு பெலவீனனையும் பெலப்படுத்தி, அவனை பெலவானாக்கி, அவனை கொண்டு தன் திட்டத்தை செய்து முடிப்பார்.

> “வாலிபனே நீ யார், உன் பெலன் என்ன என்பதை விட,
> உன்னை அழைத்தது யார்? உன்னை அபிஷேகம் செய்தது யார்?
> உன்னை தன் பெலத்தால் இடைக்கட்டி
> உன்னை ஒரு பெலவானாக உயர்த்தும் தேவன் யார் என்பதை அறிந்து செயல்படு”

**அவர் உன்னை பெலப்படுத்தும் போது நீ அசாதாரணமான காரியங்களை செய்ய முடியும். இந்த எழுப்புதல் நாளில் தேவன் வாலிபர்களை வல்லமைப்படுத்தி வருகிறார் என்றால் மிகையாகாது. உன்னையும் அவர் பெலப்படுத்தி நிலைநிறுத்துவார். எந்த ஒரு காரியத்தையும் என்னால் செய்ய முடியாது என்று நினைக்கிற உன்னை தான் தேவன் அசாதாணமான காரியத்தை செய்ய வைப்பார். எனவே பெலப்படு, திடப்படு, புறப்படு, சுவிசேஷ பணியை செய்ய உன்னை தேவன் பெலப்படுத்துகிறார்.**

முதல் முறை வந்த இயேசுக்கு சிலுவையை கொடுத்தோம்.
இனி வரப் போகும் இயேசுவுக்கு சிங்காசனத்தைக் கொடுக்க செயல்படு, விரைந்திடு...

கிறிஸ்துவின் பணியில்
அவினாஷ்



# ஏற்ற காலத்தில் உயர்வு

சாட்சி: பெனிட்டா







**கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருந்தாலும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளாமல், தன் விருப்பப்படி வாழ்ந்த சகோதரியை, தேவன் தன் பக்கமாய் திருப்பி இன்று ஊழியம் செய்யும் அளவிற்கு எப்படி உயர்த்தினார் என்பதை அவர்களே சொல்கிறார்கள்... கேட்போம் வாருங்கள்.**

### உங்களைப் பற்றி சொல்லுங்களேன்?

என் பெயர் கெத்சி கிளார்வின். நான் சென்னையில் திரு. ஜார்ஜ், திருமதி. ஜோதி அவர்களுக்கு மூன்றாவது பிள்ளையாக பிறந்தேன். எனக்கு ஆரோன் ஜெபராஜ் மற்றும் ஜெபஸ்டின் ஜெயராஜ் என்று இரண்டு சகோதரர்கள் இருக்கிறார்கள். கர்த்தர் கிருபையாய் எங்கள் மூவருக்கும் ஏற்ற துணையைக் கொடுத்து ஆசீர்வதித்திருக்கிறார். நான் இப்பொழுது திருமணமாகி சிவகாசி மாநகராட்சியில் வசித்து வருகிறேன்.

### சரி ... உங்கள் சிறு பிராயத்தில் உங்களுக்கும் இயேசுவுக்குமான உறவு எப்படிப்பட்டதாக இருந்தது?

நான் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருந்தாலும், எங்கள் குடும்பம் முழுவதுமாய் ஓர் பெயர் கிறிஸ்தவர்களாகவே காணப்பட்டோம். தினமும் ஜெபிப்பது, வேதம் வாசிப்பது, ஊழிய வாஞ்சை என்ற ஒன்றும் என் வாழ்வில் இல்லாதவளாகவே என் பள்ளி பருவத்தில் நான் வளர்ந்தேன். இயேசுவை என் வாழ்வில், எனக்கான ஒரு ATM Machine போன்று தான் வைத்திருந்தேன். காரணம், தேர்வு நேரத்தில் மட்டுமே அவரைத் தேடுவேன். ஆகிலும் அவர் எப்பொழுதுமே என் வாழ்வில் நல்லவராகவே இருந்தார். ஒரு சம்பவத்தை நான் சொல்கிறேன். 2012-ல் நான் 12-ம் வகுப்பு பொது தேர்வு எழுத சரியாக 3 மாதங்களே இருந்தது. அப்பொழுது வைத்த தேர்வில் நான் Chemistry பாடத்தில் 88/200 மதிப்பெண் மட்டுமே எடுத்து தோல்வியுற்றேன். ஒருசில நாட்களுக்கு பிறகு நான் எங்கள் வகுப்பின் வெளியே சக மாணவர்களுடன் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்த பொழுது, பள்ளி தாளாளர் என்னிடம் வந்து கடைசி தேர்வில் உன் மதிப்பெண் என்ன என்று கேட்டார்கள். நான் FAIL என்று சொன்னதும், எல்லோர் முன்பாக என்னை மிகவும் கேவலமாய் திட்டிவிட்டார்கள். எனக்கு அது மிகவும் வருத்தத்தை கொடுத்தது. நான் வீட்டிற்கு சென்றவுடன், முழங்கால்படியிட்டு, "இயேசப்பா, நான் உம்மையே நம்பியிருக்கிறேன்; என்னை வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும்" என்று ஒரு சின்ன ஜெபம் செய்தேன். நான் சோர்ந்தும் போகவில்லை, அந்த ஆசிரியை மீது கோபப்படவுமில்லை. மாறாக, கர்த்தரிடம் ஜெபித்து Chemistry பாடத்தை இன்னும் கொஞ்சம் அதிக கவனத்தோடு படித்து பொதுத் தேர்வை எழுதினேன். மூன்று மாதங்களுக்கு முன்பு தோல்வியுற்ற அதே Chemistry பாடத்தில், பொது தேர்வில் 174/200 மதிப்பெண்கள் எடுத்தேன். அதுமட்டுமல்ல, நான் MSC., BEd., பட்டப்படிப்பை அதே Chemistry பாடத்தில் முடிக்க கர்த்தர் கிருபை செய்தார். மேலும், எல்லோருக்கும் முன்பாக வெட்கப்பட்ட அதே பள்ளியில் நான் அறிவியல் ஆசிரியராக பணியாற்றவும் கர்த்தர் எனக்கு கிருபை செய்தார்.

### சூப்பர்... எப்படி இரட்சிக்கப்பட்டீர்கள்? ஆண்டவருக்கும் உங்களுக்குமான உறவு எப்படி மலர்ந்தது? அதை பற்றி சொல்லுங்களேன்?

2013-ம் ஆண்டு நான் ஒரு கிறிஸ்தவ கல்லூரியில் முதலாம் ஆண்டு பயின்று வந்தேன். அங்கிருந்த ஒரு கிறிஸ்தவ ஆசிரியை என்னை என் நண்பர்களுடன் ஒரு முகாமிற்கு அழைத்து சென்றார்கள். அங்கு தான் நான் முதன் முதலில் என் பாவத்தை உணர்ந்து அறிக்கை செய்து, இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, இரட்சிப்பை பெற்றுக்கொண்டேன். தொடர்ந்து ஜெபிக்கவும், வேதம் வாசிக்கவும் ஆரம்பித்தேன். ஆகிலும் அது அதிக நாட்கள் நீடிக்கவில்லை. கர்த்தரை தேடுவது, அதே நேரத்தில் உலக பிரகாரமாகவும் வாழ்வது என்று மாய்மாலமாய் வாழ்ந்து வந்தேன். இப்படியே வருடங்கள் கடந்தன.

### ஓ... இச்சூழ்நிலையை நீங்கள் எப்படி மேற்கொண்டீர்கள்? உங்களது ஊழிய வாழ்க்கை எப்படி துவங்கிற்று?

2016-ம் ஆண்டில் திடீரென எனக்கு முதுகெலும்பில் (Spinal Problem – Disc Bulge) ஓர் பெலவீனம் ஏற்பட்டது. நாங்கள் எடுக்காத மருத்துவம் இல்லை. ஆனால் ஒன்றுமே பலன் கொடுக்கவில்லை. என்னால் மூன்று நிமிடத்திற்கு மேல் ஒரு இடத்தில் உட்காரவோ, படுக்கவோ, நடக்கவோ முடியாது. நான் சாப்பிடும் போது கூட பல முறை வலி தாங்க முடியாமல்

என் படுக்கையில் சென்று படுத்து விடுவேன். மருத்துவர்கள், "உடனடியாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். அறுவை சிகிச்சை செய்தாலும் இப்பிரச்சனை தொடர வாய்ப்பு உண்டு" என்றனர். பல மாதங்கள் இந்த வலியுடனே அவதிப்பட்டேன். ஓர் ஞாயிற்றுக் கிழமையில் நான் சோர்ந்து போய் படுத்திருந்த போது, YouTube மூலமாக "சுகமளிக்கும் தேவன்" என்று ஓர் வீடியோவை பார்த்துக் கொண்டிருந்தேன், எனக்கு இருக்கும் அதே பெலவீனத்தோடு இருந்த ஒரு நபர் 'கர்த்தர் எனக்கு சுகம் கொடுத்தார்' என்று சொல்லி தனது சாட்சியை பகிர்ந்து கொண்டிருந்தார். அது என் விசுவாசத்தை பெருகச் செய்தது. அப்பொழுதே நான் 'இனிமேல் எந்த Treatment-க்கும் செல்லமாட்டேன்; எந்த மருந்தும் சாப்பிடமாட்டேன்' என்று தீர்மானித்தேன். ஏனென்றால், அந்த நபருக்கு கர்த்தரால் சுகம் கொடுக்கக்கூடும் என்றால் நிச்சயம் எனக்கும் சுகம் கொடுத்தே ஆக வேண்டும் என்று நம்பிக்கையோடு ஜெபித்தேன். என் அப்பாவும் என்னோடு கூட இணைந்து ஜெபித்தார்கள். அந்த நாளில் தான் கர்த்தரின் ஊழியத்திற்கு என்று என்னை ஒப்புவித்தேன். "ஆண்டவரே, என் கால்கள் தான் எனக்கு பெலவீனமாக உள்ளது, எனவேஎன் கால்களை உமக்கென்று அர்ப்பணிக்கிறேன்" என்றேன். ஒருநாள் அதிகாலையில் என் சொப்பனத்தில் "ஓர் ஒளி என் மீது படுகிறது, அது பயங்கர அனலாய் இருக்கிறது" என்னால் அந்த அனலை உணரவும் முடிகின்றது. உடனே எழுந்து ஜெபிக்க ஆரம்பித்தேன். அத்தருணமே எனக்கு இருந்த அந்த பெலவீனம் முற்றிலுமாய் மறைந்தே போயிற்று. அன்றிலிருந்து இன்று வரையிலும் அந்த வலி இருந்ததற்கான அடையாளம் கூட தெரியாத வண்ணம் கர்த்தர் எனக்கு பரிபூரண சுகத்தை இலவசமாய் கொடுத்தார். அப்பொழுது இருந்தே ஊழியத்தின் மீது எனக்கு வாஞ்சை அதிகரித்தது. அதிசயமாய் கிராம ஊழியத்திற்கான வாசல் திறந்தது. ஞாயிறு தோறும் நானும் என் குழுவில் உள்ள வாலிப பெண்களும் இணைந்து கிராமங்களுக்கு சென்று சிறு பிள்ளைகள் மத்தியில் ஊழியம் செய்து வந்தோம். கர்த்தர் என் கால்களை பயன்படுத்தினார்.



கெத்சி தன் பெற்றோருடன்

**ஊழியத்தை துவங்கிவிட்டீர்கள் சரி... அதற்கு பின் ஏதும் போராட்டங்களை சந்தித்தீர்களா?**

தொடர்ந்து குழுவாய் ஜெபிக்கவும் ஊழியம் செய்யவும் ஆரம்பித்தேன். நான் பெண் பிள்ளை என்பதால் என் பெற்றோர் ஊழியத்திற்கு செல்ல தடை செய்ய ஆரம்பித்தனர். எனக்கு அது மிகவும் கலக்கத்தை ஏற்படுத்தியது. அப்பொழுது கர்த்தரிடம், "நான் கிறிஸ்தவ குடும்பத்தில் தானே பிறந்திருக்கிறேன், பிறகு ஏன் என்னால் சுலபமாய் ஊழியத்திற்கு செல்ல முடியவில்லை" என்றேன். கர்த்தர் என் இருதயத்தில், "வெளியிடங்களில் ஊழியம் செய்கிறாய் சரிதான், ஆனால் உன் குடும்பத்தை கவனித்தாயா? அவர்களில் எத்தனை பேர் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள்" என்று பேசினார். அப்பொழுது தான் நான் என் குடும்பத்தின் இரட்சிப்பிற்காய் பாரபட்டு ஜெபிக்க ஆரம்பித்தேன். 2018-ம் ஆண்டிலிருந்து அனுதினமும் என் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரின் பெயரையும் சொல்லி ஜெபிக்க ஆரம்பித்தேன். கர்த்தரின் வழி நடத்துதலால் குடும்ப ஜெபத்தை ஆரம்பிக்க கர்த்தர் கிருபை செய்தார். அதற்கு பல போராட்டங்களும் தடைகளும் வந்தாலும் கூட கர்த்தர் கிருபைகளை கொடுத்து குடும்பத்தில் ஓர் எழுப்புதல் உண்டாக என்னை அங்கு பயன்படுத்தினார். அதுமட்டுமல்லாமல் "ஆண்டவரே, நான் திருமணமாகி இந்த வீட்டை விட்டு போவதற்குள் என் குடும்பத்தில் உள்ள அனைவரும் இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும்" என்பதே என் விண்ணப்பமாக இருந்தது. கர்த்தர் என் ஜெபத்தை கேட்டார். எனக்கு 2021ம் ஆண்டு திருமணம் ஒழுங்கு செய்யப்பட்டது. இடைப்பட்ட ஆண்டிற்குள் என் குடும்பத்தில் உள்ள அனைவரும் இரட்சிக்கப்பட்டனர். இன்று ஜெபிப்பது, வேதம் வாசிப்பது, கர்த்தரை விசுவாசித்து கர்த்தரின் விருப்பப்படி வாழ்வது என என் குடும்பம் முற்றிலுமாய் மாறியது. எங்கள் குடும்பத்தில் தற்போது வந்துள்ள இரண்டு அண்ணிகளும் கூட கர்த்தர் மீது மிகுந்த வைராக்கியம் கொண்டு ஊழியம் செய்பவர்கள். எங்கள் குடும்பம் கர்த்தரின் அனைத்து ஆசீர்வாதங்களையும் பெற்றுள்ள பூரண குடும்பமாய் மாறிற்று.

**குடும்பத்தில் உங்களது ஊழியத்தை பற்றி தெரிந்துக் கொண்டோம், நீங்கள் செய்த மற்ற ஊழியங்கள் குறித்தும் கொஞ்சம் சொல்லுங்களேன்?**

'அற்பமான ஆரம்பத்தை யார் அசட்டைப் பண்ணக்கூடும்', என்ற வார்த்தையின் படி ஓர் Prayer Group-ல் ஜெபக் குறிப்புகளை தினமும் post செய்வதுதான் நான் செய்த முதல் ஊழியம். அதன் பிறகு என் ஜெப வாழ்க்கை மாறினது. தொடர்ந்து அதிகாலை 3 மணிக்கு கர்த்தர் கிருபையால் ஜெபிக்கும் பழக்கத்தைப் பெற்றேன். அதன் மூலம் கர்த்தர் என்னிடம் பேச ஆரம்பித்தார். தனி ஜெபம், குழுவாக இணைந்து ஜெபிப்பது, இதனை தொடர்ந்து எங்கள் பகுதிக்காக குறிப்பாய் ஜெபிக்க ஆரம்பித்தோம். ஜெபிப்பது, ஜெப நடை செல்வது, வியாபாரிகளுக்கு கைப்பிரதி கொடுப்பது, என் வீட்டிற்கு அருகில் இருக்கும் சிறு பிள்ளைகளுக்கு சுவிசேஷம் அறிவிப்பது என கர்த்தர் என்னை பயன்படுத்தி வந்தார். ஜெபிக்க துவங்கினதில் இருந்தே அநேக அற்புதங்களை காண ஆரம்பித்தேன். அதில் ஒன்று மாத்திரம் சொல்கிறேன். எங்கள் தெருவில் அநேக அநியாய மரணங்கள் சம்பவித்து கொண்டே இருந்தது. குடும்ப தகராறில் தூக்கு



போட்டு மரிப்பது, இளம் வாலிபன் விபத்தில் உயிரிழப்பது, என் வீட்டிற்கு முன் வசிக்கும் ஓர் சிறு குழந்தை காலையில் விளையாடி கொண்டிருந்தது, மாலையில் ஏதோ நோயினால் மரிப்பது என அநேக மரணங்கள் ஒவ்வொரு வாரமும் சம்பவித்துக் கொண்டே இருந்தது. ''ஆண்டவரே, நான் இங்கு இருக்கும் நாட்கள் மட்டும் இனி எப்போதும் இப்படிப்பட்ட அநியாய மரணங்கள் சம்பவிக்கக் கூடாது, இதற்கு நான் உத்திரவாதம் எடுக்கிறேன்'' என்று தொடர்ந்து ஜெபித்தேன். நான் அங்கிருந்த 4 வருடங்களில் ஒரு அநியாய மரணம் கூட ஏற்படாமல் கர்த்தர் காத்துக்கொண்டார். இது போன்று நான் வேலை பார்த்த பள்ளியிலும், நான் கிராம ஊழியத்திற்கு சென்ற இடத்திலும் அநேக அற்புதங்களும் அடையாளங்களும் நடந்தன. ''நான் ஓர் பெண், எனக்கு ஒரு திறமையும் கிடையாது, நான் உமக்கு பயன்படவே முடியாது'' என்று கர்த்தருக்கே ஆலோசனைக் கொடுத்த என்னை இன்று இப்படியாக பயன்படுத்தியது அவருடைய கிருபை மட்டுமே. எல்லா மகிமையும் கர்த்தருக்கே உரியது.



கெத்சி தன் கணவர் மற்றும் பெற்றோருடன்

**திருமணத்திற்கு முன்பு உங்களை போன்று அநேக பெண் பிள்ளைகள் ஊழியம் செய்கின்றனர், திருமணத்திற்கு பிறகு உங்களது ஊழிய வாழ்க்கை எப்படி உள்ளது என்பதை பற்றி சொல்றீங்களா?**

என் திருமணத்தில் நான் பல போராட்டங்களை சந்தித்தேன். என் குடும்பம் அந்நாட்களில் இரட்சிக்கப்படாததால் அவர்களின் எதிர்பார்ப்பு வேறு மாதிரியும், நான் ஊழியம் செய்வதால் என்னுடைய எதிர்பார்ப்பு வேறு மாதிரியும் இருந்தது. ஒரு நாள் திருமணமான ஒரு சகோதரி என்னிடம், 'நானும் என்னுடைய வாலிப நாட்களில் கர்த்தருக்காய் உன்னைப் போன்று அநேக ஊழியம் செய்தேன், ஆனால் திருமணத்திற்கு பிறகு என்னால் முடியவில்லை' என்றார். அந்த வார்த்தை என்னை மிகவும் தொட்டது. அந்த பெண்ணால் ஏன் திருமணத்திற்கு பிறகு ஊழியம் செய்ய முடியவில்லை என்று எனக்குள்ளே கேள்வி கேட்க ஆரம்பித்தேன். அதிலிருந்து நான், ''ஆண்டவரே, என் திருமணத்தில் என் பெற்றோர் விருப்பமும் அல்ல, என் விருப்பமும் அல்ல, தேவனுடைய சித்தம் மட்டுமே நடக்க வேண்டும்'' என்றும், ''நான் திருமணத்திற்கு பிறகு இன்னும் அதிகமாய் உமக்கு ஊழியம் செய்ய வேண்டும்'' என்றும் ஜெபித்தேன். கர்த்தர் அற்புதமாய் சிவகாசியில் இருந்து ஓர் குடும்பத்தை அழைத்துக் கொண்டு வந்தார். கர்த்தரிடமிருந்து அடையாளமாய் சமாதானத்தைப் பெற்றுக்கொண்டபின், குடும்பமாய் 3 நாட்கள் உபவாசித்து கர்த்தரின் சித்தம் இதுவே என்ற நிச்சயத்தோடு திருமணத்திற்கு ஒப்புக்கொண்டேன்.

கர்த்தரின் சித்தம் எவ்வளவு நன்மையை உண்டு பண்ணும் என்பதை என் திருமணத்தில் நான் பார்க்கிறேன். ஏனென்றால், நான் திருமணமாகி சென்ற குடும்பத்தில் என் மாமாவும் என் அத்தையும் முழு நேர ஊழியர்கள். என் கணவர் எனக்கு எப்பொழுதும் நல்ல ஆலோசனைகளைக் கொடுத்து, கர்த்தரிடம் என்னை இன்னும் நெருங்க வைத்து, இன்னும் அதிகமாய் ஊழியம் செய்ய உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கிறார். என் முழு குடும்பமும் நான் கர்த்தருக்கென்று ஊழியம் செய்வதை அதிகம் விரும்பி எனக்கு எல்லா விதத்திலும் உதவிகளை செய்கின்றனர். அருகில் இருக்கும் கிராம சபைகளுக்கு சென்று கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கம் பண்ணுவது, வாலிபர்களுக்கு பயிற்சி கொடுப்பது, திருமணத்திற்கு ஆயத்தமாகிறவர்களுக்கு ஆலோசனைக் கொடுப்பது என எல்லா விதத்திலும் கர்த்தர் என்னை இங்கு இன்னும் வல்லமையாய் பயன்படுத்தி வருகின்றார். கர்த்தர் என் எல்லா விருப்பங்களையும் வாஞ்சைகளையும் நிறைவேற்றினார். 'நேர்த்தியான இடங்களில் எனக்கு பங்கு கிடைத்தது' என்ற வார்த்தையின் பிரகாரம் கர்த்தர் கொடுத்த என் கணவருக்காக, என் மாமா மற்றும் அத்தைக்காக, மற்றும் என் கணவரின் சகோதரர் குடும்பத்திற்காகவும் கர்த்தரை நான் மிகவும் ஸ்தோத்தரிக்கிறேன்.

**வாலிபர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?**

''கர்த்தரை தெய்வமாக கொண்ட ஜனம் பாக்கியமுள்ளது,'' நாம் பாக்கியம் பெற்றவர்கள். எனவே, இருக்கின்ற இந்த வாழ்வை கர்த்தர் கரத்தில் ஒப்புக்கொடுத்து, அவர் ஒருவரையே சார்ந்துக்கொண்டு, அவர் சொல்லுக்கு கீழ்ப்படிந்து, அவர் காட்டும் பாதையில் எந்த தயக்கமுமின்றி நடக்க ஆரம்பியுங்கள், உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எதிர்பார்த்திராத அநேக நன்மைகளை நீங்கள் பெற்றுக்கொள்ளுவீர்கள். ''ஏற்ற காலத்தில் அவர் உங்களை உயர்த்தும்படிக்கு அவர் பலத்த கைக்குள் அடங்கி இருங்கள்''.

**அன்பான வாலிபர்களே! கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தாலும் இயேசுவுக்கும், அவர்களுக்கும் எந்த உறவும் இல்லாமல் இருந்த சகோதரி கெத்சி, வியாதி படுக்கையில் சுகம் பெற்று கர்த்தர் பக்கமாய் திரும்பி, இன்றைக்கு அநேகருக்கு சாட்சியாக பயன்பட முடியுமானால், உங்களையும் தேவன் பயன்படுத்துவார். அதற்கு நீங்கள் அவருடைய கரத்திற்குள் அடங்கி இருக்க வேண்டும் ■**



புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

இந்த மாதம் பெண்கள் தினத்தை சிறப்பிக்கும் வகையில் வேதாகமத்தில் உள்ள பெண்களைக் குறித்த கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது. சரியான விடையை வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.

## வினாக்கள்

1. சாப்நாத்பன்னேயாவின் மனைவி பெயர் என்ன?
2. பவுலால் சகோதரியென்று அழைக்கப்பட்ட, கெங்கிரேயா ஊர் சபையின் ஊழியக்காரி யார்?
3. மாயமற்ற விசுவாசத்தை கொண்டிருந்த தீமோத்தேயுவின் பாட்டி பெயர் என்ன?
4. இயேசுவுக்கு ஊழியம் செய்த ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவி யார்?
5. முற்பிதாக்களின் மனைவிகளில் மக்பேலா என்றும் குகையில் அடக்கம் பண்ணப்படாத பெண் யார்?
6. இயேசுவின் தாயாகிய மரியாளைத் தவிர்த்து, இயேசுவின் வரலாற்றில் இடம் பெற்ற ஸ்திரீகள் யார்?
7. இயேசு உயிர்த்தெழுந்த பின்பு முதலில் யாருக்கு தரிசனமானார்?
8. ஏழு குமாரரைப் பார்க்கிலும் அருமையாயிருந்த மருமகள் யார்?
9. கூடாரத்தில் வாசமாயிருக்கிற ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் யார்?
10. அகாஸ்வேரு ராஜாவின் ராஜாத்தியாகிய எஸ்தரின் மறுபெயர் என்ன?

## கடந்த மாத விடைகள்

1. காயீன் (ஆதி. 4:1)
2. நப்தலி (ஆதி. 30:8)
3. சாராள் (ஆதி. 17:16)
4. ஏதோம் (ஆதி. 25:30)
5. மோசே (யாத். 2:10)
6. கெர்சோம் (யாத். 2:22)
7. யெருபாகால் (நியா. 6:32)
8. மாராள் (ரூத் 1:20)
9. ஏசா (ஆதி. 25:25)
10. யாக்கோபு (ஆதி. 25:26)




பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள்
15.03.2022

கடந்த மாத வெற்றியாளர்
சுமி, அரக்கோணம்
அவர்களை வாழ்த்துகிறோம்.

Jesus Redeems Youth Ministries,
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535.
eMail: youth@jesusredeems.org

ஆலோசனை: அலி



# கனவு நிறைவேறுமா?

*Can the dream come true?*

**Heart Beat**

நான் 12ஆம் வகுப்பு படிக்கும் போது எனது தாயார் மரித்து விட்டார்கள். எனக்கு என் அம்மா தான் பாடங்கள் சொல்லிக் கொடுப்பார்கள். என் தாயாரின் மரணத்திற்கு பிறகு எனக்கு பாடம் சொல்லி கொடுக்க யாரும் இல்லை. தாயாரின் இழப்பு எனக்கு மிகவும் கவலையாக உள்ளது. நான் 2 வருடங்களுக்கு முன்பு 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதி 3 பாடங்கள் தோல்வியுற்றேன். 2 முறை தேர்வு எழுதியும் என்னால் வெற்றி பெற முடியவில்லை. என் குடும்பத்தார் உன்னால் வெற்றி பெற முடியாது, நீ எதற்கும் லாயக்கு இல்லை என்று அவமானப்படுத்துகிறார்கள். ஆனால் இந்த வருடம் என்னால் முடிந்த அளவு படித்து தேர்வு எழுத போகிறேன். எனக்கு பயமாக இருக்கிறது. ஆனால் என்னுடைய அம்மாவிற்கு நான் ஒரு கம்பியூட்டர் இன்ஜினியராக வேண்டும் என்பது தான் அவர்களது கனவு. என் தாயாரின் நினைவாகவே இருக்கிறது. நான் எப்படி படித்து வெற்றி பெறுவது என்று எனக்கு சொல்லுங்களேன் - ஜோஸ், பெங்களூர்.


அன்பு தம்பி ஜோஸ்! உங்களின் வேதனையும், மனபாரமும் நன்கு புரிகிறது. ஒரு பக்கம் தாயை இழந்த துக்கம், மறுபக்கம் உங்களை தேற்றகூட ஒருவரும் இல்லை, படிப்பின் தோல்வி மறுபக்கம் உங்களை சோர்ந்து போக வழி வகுத்து விட்டது.

ஜோஸ், உங்களது நிலையில் யார் இருந்தாலும் முடங்கி போய் இருப்பார்கள். ஆனால் நீங்கள் இரண்டு முறை தேர்வு எழுதுவதற்காக முயற்சித்துள்ளீர்கள். இதுவே நீங்கள் ஒரு திடநம்பிக்கையுள்ள நபர் என்பதை வெளிப்படுத்துகிறது. பலர் உங்களை ஊக்கப்படுத்தாமலும், இழப்பின் மத்தியிலும், வேதனையின் மத்தியிலும், தோல்விகள் உங்களை முழ்கி போக செய்த போதிலும், ஒருவரின் உதவி இல்லாமல் போராட களம் இறங்கியதை நான் பாராட்டுகிறேன்.

ஒருவர் போராட தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் தான் முக்கிய காரணம். அவை இரண்டும் உங்களிடம் இருப்பதை பார்க்க முடிகிறது. தோல்வியோ, குறை கூறும் வார்த்தைகளோ உங்களை தடுக்கவோ அல்லது முடக்கவோ முடியாது. ஆனால் அந்த வார்த்தைகளை நீங்கள் நம்பும் போதும், அதை பற்றியே யோசிக்கும் போதும் உங்களை சோர்வுப்படுத்த முடியும். அந்த சோர்வு நாளடைவில் கவலையாக மாறி, பின்னர் பயமாக உருவெடுத்து உங்களை முடக்குவதற்கான வாய்ப்பு உண்டாகும். உன்னால் முடியாது, உன்னால் வெற்றி பெற இயலாது, ஒன்றுக்கும் உபயோகமில்லாதவன் என்ற எந்த வார்த்தையும் உங்களை முடக்கி விடவோ அல்லது மாய்த்து விடவோ முடியாது.

ஜோஸ், இந்த சூழலில் நீங்கள் மறுபடியும் போராட எழும்புவதும், அல்லது உலகம் சொல்லும் பொய்யான கருத்துக்களையும், நேர்மறையான வார்த்தைகளையும் நம்பி முடங்கி உட்காருவதும், உங்கள் கையில் தான் உள்ளது.

உங்களுக்கு உதவ ஒருவர் இருக்கிறார், அவர் தான் இயேசு. அவர் உங்கள் இதயத்தில் உள்ள வெற்றிடத்தை ஆறுதலினால் நிரப்பி, திட நம்பிக்கையால் பெலப்படுத்தி, வெற்றியின் படிக்கட்டில் உங்களை நடக்க செய்து, உங்களுக்கு மனமடிவு உண்டாக்கினவர்கள் முன் சிகரத்தில் உயர்த்த அவரால் முடியும்.



## ஒருவேளை அந்த சோர்வு வார்த்தைகளை நம்பினால் என்ன நடக்கும்?

- ✗ படிக்கவே முடியாது என்று ஒரு மூலையில் முடங்கி விடுவீர்கள்
- ✗ கம்பியூட்டர் இன்ஜினியர் என்ற தாயின் கனவு, கனவாகவே மாறிடும்.
- ✗ எதிர்மறையான எண்ணங்கள் உங்களை முடக்கி, மனமுடைந்து போக செய்யும்.
- ✗ குடும்பத்தாரின் ஓயாத சோர்வின் வார்த்தை, உங்கள் வாழ்வையே கசப்பாக்கி விடும்.
- ✗ இன்னும் சொல்லப்போனால் நான் ஏன் வாழ வேண்டும் என்ற எண்ணத்தை சாத்தான் உங்கள் இருதயத்தில் விதைப்பான்.
- ✗ போராட எண்ணம் இல்லாததால், தோல்வியை ஒப்புக் கொண்டு ஓரமாக ஏதோ ஒரு மூலையில் வாழ்க்கையை கழிக்க வாய்ப்பு உண்டு.

துக்கம், தோல்வி என்ற இந்த எதிர்மறையான எண்ணம் உங்களை இயேசுவின் அன்பினை உணரவோ அல்லது ஏற்கவோ மனம் உண்டாக்காமல், நீங்கள் பிரயோஜனமற்றவன் என்று, நீங்களே உங்களை நொந்துக் கொள்ளுகிற அளவுக்கு தள்ளிவிடும்.

## ஒருவேளை போராட எழும்பினால் எப்படிப்பட்ட சிகரத்தை அடையலாம்?

- ✓ முதலில் என்னால் முடியும், நான் முயற்சி செய்வேன், தினம் பயிற்சி செய்வேன். கடினமாக என்னால் படிக்க முடியும், Confuse ஆகாமல் எழுத முடியும் என்று மனதை உற்சாகப்படுத்துங்கள்.
- ✓ மூன்று முறை தோல்வி என்பது, நிரந்தர தோல்வி இல்லை என்று ஆணித்தரமாக நம்புங்கள்.
- ✓ எந்த +12 தேர்வில் மூன்று முறை தோல்வியுற்றீர்களோ அதே படிப்பை சற்று கவனம் செலுத்தி மீண்டும் படித்தால், வெற்றி பெற்று. கல்லூரிப் படிப்பை தொடரலாம்.
- ✓ எந்த தாயாரின் பிரிவும், இல்லாமையும் நீங்கள் போராட தடையாய் இருந்ததோ, அதே தாயின் அன்பை உங்களுக்கு காட்டும் இயேசுவின் அன்பினை நீங்கள் உணரும் போது, அவர் உங்களை பெலப்படுத்துவார் என்று நம்புங்கள்.
- ✓ கல்லூரிப் படிப்பு மட்டுமல்ல, உங்கள் அம்மாவின் கனவாகிய கம்பியூட்டர் இன்ஜினியராக உயர உங்களால் முடியும் என்று உங்களை நீங்கள் நம்புங்கள்.
- ✓ எனக்கு தெரிந்த சகோதரி அவர்கள் தன் இயலாமையை யோசிக்காமல், இயேசு என்னை பெலப்படுத்துவார் என்று எண்ணி தன் அருகில் ஒரு நாற்காலியைப் போட்டுக் கொண்டு, இயேசு தன்னோடு உட்கார்ந்து தன் படிப்புக்கு உதவுவது போல் எண்ணி, நம்பிக்கையோடு படிக்க ஆரம்பித்தார்கள். முடிவில் அவர்கள் பள்ளியில் முதல் மதிப்பெண் எடுத்தார். அதுபோல நீங்களும் முயற்சி செய்து படித்து பாருங்கள். வெற்றி நிச்சயம்,
- ✓ நீங்கள் படிக்க ஆரம்பிக்கும் போது, ஒரு நாற்காலி பக்கத்தில் போட்டுக் கொண்டு, என் அம்மா சொல்லிக் கொடுப்பது போல் என் இயேசு உதவி செய்வார் என்று நம்பிக்கையுடன் செயல்படுங்கள்.
- ✓ எந்த உறவினர்கள், குடும்பத்தார் உங்களை கேலி செய்தார்களோ அவர்கள் முன்னிலையில், நான் வாழ்ந்து காட்டுவேன் என்று துணிச்சலான சவாலை மனதில் கொள்ளுங்கள்.

நிச்சயம் நீங்கள் ஒரு சாதனையாளராக மாற முடியும். உங்களின் சவாலான வாழ்க்கை அநேகருக்கு ஒரு பெரிய எடுத்துக்காட்டாக மாற வாய்ப்பு உண்டு. இயேசு உங்களுக்கு அந்த வெற்றியையும், உயர்வையும், மன தைரியத்தையும் தருவார்! ஜெபித்து செயல்படுங்கள்!!

**"சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்"** (ஏசாயா 40:29).



# பெலப்படுத்தினார்

1960ஆம் ஆண்டிலிருந்து நடத்தப்பட்டு வரும் பாராஒலிம்பிக் போட்டிகளில் இந்தியா சார்பாக எந்த பெண்களும் பதக்கம் வென்றதில்லை. ஆனால் 2016ஆம் ஆண்டு பிரேசிலில் நடைபெற்ற பாராஒலிம்பிக் போட்டியில் எட்டா கனியாக இருந்த கனவை, குண்டு எறிதல் போட்டியில் 4.61 மீட்டர் குண்டு எறிந்து வெள்ளிப் பதக்கம் வென்று இந்தியாவின் கனவை நனவாக்கினார் தீபா மாலிக். இவர் அரியானாவில் சோனிபர் மாவட்டத்தில் சிறிய கிராமத்தில் ராணுவ அதிகாரியின் மகளாக 1970ஆம் ஆண்டு செப்டம்பர் 30ம் தேதி பிறந்தார்.

எல்லா குழந்தைகளைப் போல துள்ளித்திரிந்த தீபா மாலிக், ஐந்து வயதாக இருக்கும்போது முதுகு தண்டில் கட்டி இருப்பது கண்டறியப்பட்டு, மூன்று வருட சிகிச்சை மற்றும் பிசியோதெரபிக்குப்






பிறகு அதிலிருந்து மீண்டார். இருப்பினும், 1999ஆம் ஆண்டில், அவரது 29வது வயதில் மறுபடியும் முதுகுத்தண்டில் அக்கட்டி தோன்றி மிகவும் அவதிப்பட்ட இவருக்கு, அறுவை சிகிச்சை செய்வதைத் தவிர வேறு வழியின்றி 3 அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டதோடு, இவரது உடலில் 183 தையல்கள் போடப்பட்டன. ஆனால் அது அவரை இடுப்பிலிருந்து கீழே செயலிழக்கச் செய்தது. இந்தச் சம்பவம் அவர் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டது. அறுவை சிகிச்சைக்குப் பிறகு, அவர் கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகள் பிசியோதெரபிக்கு உட்படுத்தப்பட்டார். ஒரு பக்கம் சரீரத்தில் உண்டான பெலவீனம், இன்னொரு பக்கம் மனதளவில் உண்டான பாதிப்பு இவை இரண்டையும் கண்டு சோர்ந்து போய் முடங்கி விடாமல் தன்னை பெலப்படுத்திக் கொண்டு சாதிக்க வேண்டும் என்ற

உணர்வுடன் வாழ்க்கையில் வரும் சவால்களை மேற்கொண்டு வலிகளைத் தாங்கி சாதனைகளை நோக்கி முன்னேற ஆரம்பித்தார்.

இவருடைய அயராத உழைப்பு மற்றும் விடாமுயற்சியால் குண்டு எறிதல் மட்டுமின்றி, நீச்சல், ஈட்டி எறிதல் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுதல் உள்ளிட்ட பல விளையாட்டுப் பிரிவுகளில் வீராங்கனையாக இந்தியா மற்றும் உலக அளவில் ஜொலித்து வருகிறார். பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளில் 18 சர்வதேச மற்றும் 54க்கும் மேற்பட்ட தேசிய பதக்கங்களை வென்றுள்ளார். இதுமட்டுமின்றி 2012ஆம் ஆண்டு அர்ஜுனா விருதைப் பெற்ற முதல் பெண் மாற்றுத்திறனாளி இவர் ஆவார். மேலும் 2017ஆம் ஆண்டு பத்ம ஸ்ரீ விருது, 2019ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருதுகளையும் இவர் பெற்றுள்ளார். இன்று அவர் இந்தியாவின் பாராஒலிம்பிக் கமிட்டியின் தலைவராக உள்ளார். தீபா மாலிக் தன்னுடைய பெலவீனத்தைக் கண்டு சோர்ந்து போகாமல் தன்னைத் தானே பெலப்படுத்தி தனக்கு கிடைத்த எல்லா வாய்ப்புகளையும் சரியாக பயன்படுத்தி வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்கிறார்.

உங்களை நீங்களே ஆராய்ந்துப் பாருங்கள். படிப்பில் தோல்வி, சரீர பெலவீனம், நினைத்த மதிப்பெண் கிடைக்கவில்லை, விரும்பின கல்லூரியில் சீட் கிடைக்கவில்லை







என்று நீங்கள் சோர்ந்து போய் முடங்கி இருக்க போகிறீர்களா? அல்லது, தீபா மாலிக் போல உங்களுக்கு இருக்கிற வாய்ப்புகளை சரியாய் பயன்படுத்தி வெற்றியின் பாதையில் செல்ல போகிறீர்களா? உங்கள் வாழ்க்கையில் வரும் போராட்டங்கள் மற்றும் எதிர்மறையான காரியங்களைக் குறித்து சோர்ந்து போகாதீர்கள்.

சோர்வு உங்கள் சரீரத்தையும் மனதையும் பாதிப்பது மட்டுமின்றி, நீங்கள் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று யோசித்து செயல்பட முடியாத அளவிற்கு உங்களை முடக்கி விடும். கர்மேல் பர்வதத்தில் அக்கினியை இறக்கி பாகால் தீர்க்கதரிசிகளை கலங்கப் பண்ணின எலியா, யெசபேலின் வார்த்தையைக் கேட்டு சோர்ந்து, அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பி போய் சூரைச் செடியின் கீழ் படுத்து தன் வாழ்க்கையை முடித்து கொள்ள நினைத்த போது, ஆண்டவர் தன்னுடைய தூதனை அனுப்பி எலியாவை பெலப்படுத்தினார். ஆண்டவர் தந்த பெலத்தால் நாற்பது நாள் இரவு பகல் பாராமல் ஓடி ஆண்டவர் தன் மீது வைத்திருந்த திட்டத்தை எலியா செய்து முடித்தார்.

உங்கள் மீதும் ஆண்டவர் பெரிய திட்டத்தை வைத்திருக்கிறார். எனவே இன்றைக்கு உங்களை சுற்றி இருக்கும் சூழ்நிலையைக் கண்டு சோர்ந்து போகாதீர்கள்! பெலன் கொண்டு திடமனதாய் இருந்து "கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக்கிறார்;..." (சங்கீதம் 28:7) என்று விசுவாச அறிக்கையிடுங்கள். ஆண்டவர் உங்களை பெலப்படுத்தி ஸ்திரப்படுத்துவார்.





**எனக்கு அருமையான வாலிபர்களே! எதிர்காலத்தைக் குறித்த பயமும், சரீர பெலவீனத்தை குறித்த கலக்கமும் உங்கள் வாழ்க்கையில் சோர்வைக் கொண்டு வரும்போது கலங்காதீர்கள். உங்களுக்குள் இருக்கும் பெலவீனத்தைக் கண்டு முடங்கி விடாதீர்கள். நம்முடைய ஆண்டவர் "சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்" (ஏசாயா 40:29). அவர் உங்களைப் பெலப்படுத்த வெற்றியின் பாதையில் நடத்துவார்!**



# ஜெயம் கொடுக்கும் தேவன்!



செய்தி:
மோகன் சி. லாசரஸ்

**"தரியுவின் ராஜ்யபார காலத்திலும், பெர்சியனாகிய கோரேசுடைய ராஜ்யபாரகாலத்திலும் தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது"** (தானியேல் 6:28).

எக்காலத்திலும் ஜெயம் கொடுக்கிற தேவனாகிய கர்த்தர் இயேசு நமக்கு உண்டு. தானியேல் என்கிறதான வாலிபனை பாபிலோன் தேசத்திற்கு அடிமையாக கொண்டு வரப்பட்டார்கள். கர்த்தர் தானியேலோடு கூட இருந்தபடியினால், அவருக்கு வெற்றிகளைக் கொடுத்து, ஞானத்தைக் கொடுத்து ஜெயம் உள்ளவராக நிலை நிறுத்தினார். நேபுகாத்நேச்சாரின் காலத்தில் தானியேலை, ராஜாவுக்கு அடுத்த ஸ்தானத்தில் அரசாங்கத்தில் ஒரு உயர்ந்த பொறுப்பில் இருக்கும்படியாக ஜெயம் கொடுத்து உயர்த்தினார். அவருக்கு பிறகு வந்த பெல்ஷாத்சார் என்கிற ராஜாவின் காலத்திலும், தானியேல் ராஜாவுக்கு அடுத்த முதன்மையான ஸ்தானத்தில் இருந்து, ஆலோசனைக் கொடுக்கிறவராக இருந்தார் என்பதை வேதத்தில் பார்க்கிறோம். நான்கு ராஜாக்கள் மாறின பொழுதும், தானியேல் நிலையாக தேவனால் உயர்த்தப்பட்டு கொண்டே இருந்தார்.

இராஜாக்கள் மாறினாலும், தானியேலின் உயர்வும், வெற்றியும் மாறவில்லை. காரணம், தானியேலின் தேவன் ஜெயம் கொடுக்கிறவராக அவரோடுகூட இருந்தார். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் வாழ்கிற இந்த வாழ்க்கையில் ஒவ்வொருநாளும் நமக்கு போராட்டம் உண்டு. நாம் எப்பொழுது இரட்சிக்கப்பட்டு, இயேசுவை பின்பற்ற ஆரம்பித்தோமோ அப்பொழுதே யுத்த களத்திற்குள் வந்துவிட்டோம். படித்து கொண்டிருந்தால் படிப்பில், வேலை செய்து கொண்டிருந்தால் வேலையில், தொழில் செய்து கொண்டிருந்தால் தொழிலில், ஊழியம் செய்து கொண்டிருந்தால் ஊழியத்தில் போராட்டம் வரும். போராட்டம் இல்லாமல், கிறிஸ்தவ வாழ்க்கை இல்லை. நாம் அதில் ஜெயிக்க வேண்டும். அதுதான் தேவனுடைய விருப்பம்.

தானியேல் எத்தனையோ போராட்டங்களை இந்த தேசத்தில் சந்தித்தார். சிலையை வணங்க வேண்டும் என்று சொன்னபோது, தானியேல் அவருடைய நண்பர்களான சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ போராட்டங்களைச் சந்தித்தார்கள். அக்கினி சூளையில் போராட்டங்களைச் சந்தித்தார்கள். கர்த்தர் ஜெயம் கொடுத்தார். நேபுகாத்நேச்சார் பார்த்த சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லவில்லை என்றால், எல்லாருடைய தலையையும் வெட்டி விடுவேன் என்று சொல்லும் போது, அங்கும் ஒரு பெரிய போராட்டம் வருகிறது. தானியேல் ஜெபம் பண்ணி, தேவனிடத்திலிருந்து வெளிப்பாட்டை பெற்று, அந்த போராட்டத்தில் ஜெயம் பெற்றார். சிங்க கெபியில் போடப்பட்டும், அந்த போராட்டத்திலிருந்தும் அவர் வெளியே வருகிறார்.



தானியேல் 6ம் அதிகாரத்தில் அவர் சிங்ககெபியில் போடப்பட்டும் அதில் ஜெயம் பெற்றவராக வெளிவந்த சம்பவம் எழுதப்பட்டுள்ளது. இதனுடைய விளைவு என்ன தெரியுமா? சிங்ககெபியை விட்டு தானியேல் வெளியே வந்தவுடன், தேசத்தை ஆளுகிற தரியு என்கிற புறஜாதி இராஜா தேசமெங்கும் ஒரு செய்தி அனுப்புகிறார்.

பின்பு ராஜாவாகிய தரியு தேசமெங்கும் குடியிருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஜாதியாருக்கும் பாஷைக்காரருக்கும் எழுதினது என்னவென்றால்: உங்களுக்குச் சமாதானம் பெருகக்கடவது. என் ராஜ்யத்தின் ஆளுகைக்குள் எங்குமுள்ளவர்கள் யாவரும் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கிப் பயப்படவேண்டுமென்று என்னாலே தீர்மானம் பண்ணப்படுகிறது; அவர் ஜீவனுள்ள தேவன், அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர்: அவருடைய ராஜ்யம் அழியாதது; அவருடைய ராஜ்யம் அழியாதது; அவருடைய கர்த்தத்துவம் முடிவுபரியந்தமும் நிற்கும். தானியேலைச் சிங்கங்களின் கைக்குத் தப்புவித்த அவரே தப்புவிக்கிறவரும் இரட்சிக்கிறவரும், வானத்திலும் பூமியிலும்

அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கிற வருமாயிருக்கிறார் என்று எழுதினான் (தானி. 6:25-27).

தானியேலின் காரியம் ஜெயமாக இருந்தது. ஒரு தேசத்தின் ராஜா, எல்லா ஜனங்களுக்கும் எல்லா மொழிகளிலும் கடிதம் எழுதி அனுப்பி, எல்லா இன மக்களும், எல்லா பாஷைக்காரர்களும் அறிந்து கொள்ளுங்கள், தானியேலின் தேவன் ஜீவனுள்ள தேவன். இந்த இயேசு தான் இரட்சகர் என்று அவர்கள் நம்புகிறார்களோ, நம்பவில்லையோ, இயேசுவை ஏற்றுக் கொள்கிறானோ இல்லையோ, எல்லா வீடுகளிலும் இயேசு என்கிற நாமம் உச்சரிக்கப்படும். தானியேலின் தேவன் ஜீவனுள்ள தேவன் என்று ராஜாவே சொல்லிவிட்டார். அங்கு கர்த்தருடைய நாமம் உயர்த்தப்படுகிறது.



தேவன் ஒரு மனிதனைக் கொண்டுதான், எழுப்புதல் திட்டத்தை நிறைவேற்றுகிறார். ஒரு தானியேலை வைத்துதான், ஒரு தேசம் முழுவதுமே கர்த்தருடைய நாமம் மகிமைப்பட பயன்படுத்துகிறார். ஏன் இந்த தானியேல் மூலமாக ஒரு எழுப்புதல் உண்டாகிறது? ஏன் தானியேலின் காரியம் ஜெயமாக இருக்கும்படி கர்த்தர் ஜெயம் கொடுக்கிறார்? அப்பொழுது பிரதானிகளும் தேசாதிபதிகளும் ராஜ்யத்தின் விசாரிப்பிலே தானியேலைக் குற்றப்படுத்தும்படி முகாந்தரம் தேடினார்கள்; ஆனாலும் ஒரு முகாந்தரத்தையும் குற்றத்தையும் கண்டுபிடிக்க அவர்களால் கூடாதிருந்தது; அவன் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் அவன்மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை (தானியேல் 6:4). தானியேலிடம் யாருமே குற்றம் கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு ஒரு சாட்சியான வாழ்க்கை வாழ்ந்தார். அவர்மேல் பொறாமைக் கொண்டு, அவரை அழிக்க வேண்டும் என்று எழும்பின சத்துருக்கள் கூட, தானியேலின் வாழ்க்கையில் குற்றம் கண்டுபிடிக்க முடியவில்லை. தானியேல் குற்றமற்ற ஒரு வாழ்க்கை வாழ்ந்தார்.



ஜெபிக்கக் கூடாது என்று சட்டம் வந்தாலும், எனக்கு முன்பாக அரசாங்கமே எழும்பி நின்றாலும், சிங்ககெபியின் வாசல் எனக்காக திறக்கப்பட்டிருந்தாலும், என் ஜெபத்தை நான் நிறுத்த முடியாது. நான் வழக்கத்தின்படி ஜெபம் பண்ணுவேன் என்று சோர்ந்து போகாமல் ஜெபத்தில் உறுதியாக இருந்தார். ஆகவேதான், அவருடைய காரியம் ஜெயமாக இருந்தது. ஜெபத்திலே சோர்ந்து போயிருக்கிறவர்களுக்கு கர்த்தர் எப்படி ஜெயம் கொடுக்க முடியும். படிக்கிற பிள்ளைகளுக்கு தேர்வு நாட்களில் ஜெப ஆவி வந்துவிடுகிறது. இன்டர்வியூ வந்துவிட்டால், ஜெப ஆவி வந்துவிடுகிறது. நீட் தேர்வுகள் வந்துவிட்டால், பெற்றோருக்கு ஜெப ஆவி உச்சகட்டத்தில் வந்துவிடுகிறது. எல்லாம் முடிந்துவிட்டால் அவ்வளவு தான். உங்களுடைய ஜெப வாழ்க்கையை சிந்தித்துப் பாருங்கள்.

தானியேல் எதற்காக மூன்று வேளை ஜெபித்தார்?

"நான் உங்களைச் சிறைப்பட்டுப்போகப்பண்ணின பட்டணத்தின் சமாதானத்தைத் தேடி, அதற்காகக் கர்த்தரை விண்ணப்பம்பண்ணுங்கள்; அதற்குச்சமாதானமிருக்கையில் உங்களுக்கும் சமாதானமிருக்கும்" எரே. 29:7.

பாபிலோன் பட்டணத்தின் சமாதானத்தை விண்ணப்பம் பண்ணுங்கள், அதற்குள் சமாதானம் இருக்கும்போது, உங்களுக்கு சமாதனம் இருக்கும் என்று அடிமையாக அனுப்புவதற்கு முன்பாகவே கர்த்தர் ஜெபக் குறிப்பு கொடுத்து அனுப்புகிறார். நீங்கள் எப்படி ஜெபிக்க வேண்டும் என்று சொல்லி அனுப்புகிறார். அந்த தானியேல் இந்த தீர்க்கதரிசனத்தை அறிந்து, பாபிலோன் பட்டணத்திற்காக ஜெபித்திருப்பார். அந்தப் பட்டணம் விக்கிரகங்கள், மந்திரவாதிகள், குறிசொல்லுகிறவர்கள் நிறைந்த பட்டணம். பலவிதமான பிசாசோடு மக்கள் தொடர்புடைய பட்டணம். ராஜாக்கள் தங்களுக்கு என்று மந்திரவாதிகளையும், குறி சொல்லுகிறவர்களையும் கூட வைத்திருந்த ஒரு பட்டணம் அது. அப்படிப்பட்ட ஒரு தேசத்தில், அப்படிப்பட்ட ஒரு அரண்மனையில், அப்படிப்பட்ட ராஜாக்களுக்கு மத்தியில் தான் தானியேல் என்ற ஒரு மனிதரை கொண்டு வந்து நிறுத்துகிறார்.

தானியேலைப் போல ஜெபிக்க நாம் மறந்ததினால், பெரிய எழுப்புதலைப் பார்க்க முடியாமல், காலங்கள் தாமதமாகிக் கொண்டிருக்கிறது. தானியேல் தினம் மூன்று வேளை ஜெபிக்கிறார். அந்த ஜெபத்தின் விளைவுதான் ஒரு எழுப்புதல் உண்டாகிறது. ஜெபம் பண்ணக் கூடாது என்று இராஜா சட்டம் போட்டாலும் சரி, சிங்ககெபி திறந்திருந்தாலும் சரி, அக்கினி சூளையின் வாசல் திறந்திருந்தாலும் சரி, ஜெபத்தை நிறுத்த முடியாது என்பதில் தானியேல் உறுதியாக இருந்தார். அதினால் தான் தானியேலைக் கண்டு பிசாசு நடுங்கினான். அந்த ஜெபம் சாத்தானை நடுங்கப்பண்ணினது. தானியேலின் தேவனே ஜீவனுள்ள தேவன் என்றும், அந்த கர்த்தரே அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்கிற தேவன் என்று எல்லா நாவுகளும் அறிக்கைப் பண்ணும்படி செய்தது.

**அன்பான வாலிபர்களே! இன்றைக்கு உங்களுடைய படிப்பில், தொழிலில், திருமண காரியங்களில் ஜெயம் இல்லையே என்று கலங்கி நிற்கிறீர்களா? தானியேலின் தேவன் உங்கள் தேவன் எத்தனை சட்டங்கள் வந்தாலும், ஜெபிக்க தடை வந்தாலும் தானியேலைப் போல ஜெபத்தில் உறுதியாக இருக்கும் போது உங்களுடைய எல்லாக் காரியங்களையும் தேவன் ஜெயமாக மாற்றுவார்!** ■



சாதனை: சுமா

# விண்ணை நோக்கிய ஒரு பயணம்!



சாதனைபுரிய துடித்துக் கொண்டிருக்கும் அனைத்து சாதனையாளர்களுக்கும் என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள். ஒவ்வொருநாளும் நீங்கள் இடைவிடாமல் வெற்றிக்காக விடாமுயற்சியுடன் உழைத்துக் கொண்டு இருக்கிறீர்கள் என நம்புகின்றேன். நீங்கள் சந்திக்கும் தோல்விகள். எதிர்கொள்ளும் கடினமான போராட்டங்கள் ஒவ்வொன்றும் உங்கள் வாழ்க்கையை வெற்றியுள்ள வாழ்க்கையாக மாற போடப்படும் உரங்கள். ஆகவே தன்னம்பிக்கையோடு எதிர்நீச்சல் போட தயாராகுங்கள். உங்களை உற்சாகப்படுத்த ஒரு இளம் சாதனையாளரின் வாழ்க்கை பயணம் உங்களுக்காக...



1993ஆம் ஆண்டு அக்டோபர் 27ம் தேதி மத்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள ரேவா மாவட்டத்தில் பிறந்தார் அவனி சதுர்வேதி. சிறுவயதில் இருந்தே கல்பனா சாவ்லாவைப் போல் விமானத்தில் பறக்க வேண்டும் என்ற ஆசை அவனிக்கு இருந்தது. அவனி குடும்பத்தில் இருவர் இராணுவத்தில் பணிபுரிந்து வந்தார்கள். அவனிக்கு பள்ளி படிக்கும் போதே விமானத்தின் மேல் ஒரு ஈர்ப்பு இருந்தது. ஈர்ப்பு மட்டும் இல்லாமல் சாதனை புரிய வேண்டும் என்ற எண்ணமும் மேலோங்கி காணப்பட்டது. பள்ளிப் படிப்பை முடித்து விட்டு கல்லூரியில் பி.டெக் படிப்பையும் வெற்றிகரமாக முடித்தார். கல்லூரிப் படிப்பை முடித்தவுடன் இந்திய விமானப்படையில் சேருவதற்கான தேர்வை எழுதினார். விடாமுயற்சியின் பயனாக இந்திய விமானப்படையில் இணையும் வாய்ப்பு கிடைத்தது. மிக உற்சாகத்துடன் இந்திய விமானப் படையில் இணைந்தார். கல்லூரியில் படிக்கும் போதே பிளையிங் கிளப்பில் சேர்ந்தார். இதனால் விமானத்தில் பறப்பதற்கான அனுபவத்தையும் பெற்றார்.

முதலில் சாதாரண விமானத்தில் பறக்கும் ஸ்ட்ரீமில் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பின்பு 'ஃபைட்டர் ஃபிளையிங்' வாய்ப்பும் கிடைத்தது. பிறகு Pilatus என்கிற விமானத்தில் அடிப்படை பயிற்சி பெற்று ஆறு மாதம் ஹைதராபாத்தில் இருக்கும் ஹக்கிம்பேட் விமானப்படை தளத்தில், இரண்டு ஃபைட்டர் ஜெட் வகை விமானத்தை ஓட்டி பயிற்சி எடுத்தார். இதன்பின்பு ஒரு வருட தீவிர விடாபிடியான பயிற்சியை மேற்கொண்டு குஜராத் மாநிலம் ஜாம்நகர் விமானப் படைத்தளத்தில் எம்.ஐ.ஜீ. 21 ரக போர் விமானத்தை தனியாக ஓட்டிச்

சென்றார். இதனால் போர் விமானத்தை தனியாக இயக்கிய "முதல் பெண் விமானி" என்ற பெருமையைப் பெற்றார். இந்த விமானம் உலகிலேயே வேகமாக பறக்கும் திறன் கொண்டது (மணிக்கு 340 கி.மீ). இந்தியாவிலேயே முதன் முறையாக இந்திய விமானப்படையில் தீவிரமான பயிற்சி மேற்கொண்ட முதல் மூன்று பெண்களில் அவனி சதுர்வேதியும் ஒருவராவார்.

2020ம் ஆண்டு மார்ச் 9ம் தேதி அன்று 'நாரி சக்தி' என்ற விருது 'அவனிக்கு' வழங்கப்பட்டது. அவனிக்கு நல்ல ஒரு போர் விமானியாக வலம் வரவேண்டும் என்ற ஆசை ஒவ்வொருநாளும் வளர்ந்துக் கொண்டே இருக்கின்றது.

அவனி சதுர்வேதியின் வாழ்க்கை அநேக பெண்களுக்கு நல்ல ஒரு எடுத்துக்காட்டாக மாறியுள்ளது. அவனி



அவருடைய வாழ்க்கையில் அநேக போராட்டங்களை சந்தித்திருப்பார். பல மணி நேரங்கள் தன்னை ஒரு போர் விமானியாக மாற்ற செலவு செய்திருப்பார். இதன் விளைவாக இன்று அநேகர் போற்றும் பெண் போர் விமானியாக உயர்ந்துள்ளார்.



இதை வாசிக்கும் அன்பு வாலிபர்களே! எவருடைய வாழ்க்கையும் ஒரே நாளில் மாறி விடாது. வெற்றியுள்ள வாழ்க்கை வாழ வேண்டுமென்றால் அதற்கான விலைக்கிரயத்தைக் கண்டிப்பாக செலுத்த வேண்டும். ஆசையோடு கலந்த முயற்சி கண்டிப்பாக ஒருநாள் உங்களை சாதனையாளராக மாற்றும். ஆசையோடு கலந்த முயற்சி செய்யுங்கள். ஒருநாள் உங்களுடைய வாழ்க்கையும் அநேகருக்கு எடுத்துக்காட்டாக மாறும். அதற்கு என்னுடைய வாழ்த்துக்கள்.




## தேர்வு எழுதும் போது கவனிக்க வேண்டிய சில...





- தேர்வு அறைக்குள் நுழையும் முன் சட்டை, பேண்ட் பாக்கெட் போன்றவற்றை முழுவதுமாக பரிசோதித்து, தேவையற்ற பேப்பர்களை தூக்கி எறிந்துவிடுங்கள்.
- தேர்வு எழுதுவதற்கு பயன்படுத்தும், பேனா, பென்சில், ரப்பர், ஸ்கேல், அடையாள அட்டை போன்றவற்றை மட்டும் எடுத்துச் செல்லவும்.
- தேர்வு எழுதும் போது முதலில் பெருவினா, சிறுவினா, குறுவினா என்ற அடிப்படையில் வினாக்களை எழுதவும்.
- தேர்வு எழுதும் போது, முதலில் தெரிந்த வினாக்களுக்கும், பின் ஓரளவு தெரிந்த வினாக்களுக்கும், இறுதியாக பதில் தெரியாத வினாக்களுக்கும், உங்களுக்கு தெரிந்த பதிலை எழுதவும். ஒரு வினாவையும் விடாமல் அனைத்து வினாக்களுக்கும் பதில் எழுதவும்.
- பதில்களை இடைவிடாமல் தொடர்ந்து எழுதாமல், குறிப்பு குறிப்பாக எழுதி, முக்கியமான வார்த்தைகளை அடிக்கோடிட்டு காட்டவும்.
- சமன்பாடு, சூத்திரம் போன்றவற்றை கட்டம் போட்டு காட்டவும், தேவையான படங்களை பதிலுக்கு அருகிலேயே அழகாக வரையவும்.
- விடைகளை அடிக்கோடிடும் போது பல நிற பேனாக்களை பயன்படுத்த வேண்டாம். கருப்பு, நீல நிற பேனாக்கள் மற்றும் பென்சில்களை பயன்படுத்தவதே நல்லது.



# பெத்தேல்

வேதாகம தேசங்கள்: கெத்சி கிளார்வின்

அன்பு இளம் நெஞ்சங்களுக்கு, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். 'வேதாகம தேசங்கள்' என்ற தலைப்பில் வேதத்தில் உள்ள முக்கியமான தேசங்களைப் பற்றி நாம் ஆராய்ந்து வருகிறோம். கடந்த மாதம் ''கப்பர்நகூமை'' பற்றி அநேக காரியங்களை அறிந்திருப்பீர்கள். இம்மாதம் ''பெத்தேல்'' என்னும் பிரசித்தி பெற்ற பட்டணத்தைக் குறித்து பார்க்கப் போகிறோம்.

## அறிமுகம்

பெத்தேல் என்பதற்கு ''தேவனுடைய வீடு'' என்று பொருள். இது பாலஸ்தீனத்தின் பண்டைய நகரம். எருசலேமுக்கு வடக்கே 12 மைல் தொலைவில் ஆயி பட்டணத்துக்கு அருகில் இப்பட்டணம் அமைந்திருந்தது. பழைய ஏற்பாட்டு காலங்களில் மிகவும் முக்கிய நகரமாக இது கருதப்பட்டது. ''லூஸ்'' என்ற இப்பட்டணத்தின் இயற்பெயர் யாக்கோபால் ''பெத்தேல்'' என்று மறுபெயரிடப்பட்டது, பெத்தேல் என்ற சொல் வேதத்தில் 60 முறை குறிப்பிடப்பட்டுள்ளது. வேதாகமத்தில் எருசலேமுக்கு பிறகு அதிக முறை பயன்படுத்தப்பட்ட இடத்தின் பெயர் ''பெத்தேல்'' ஆகும். பெத்தேல் என்ற சொல் மருவி தற்போது இவ்விடம் ''பெய்டின் (**Beitin**)'' என்று அழைக்கப்படுகிறது.

## சிறப்பம்சங்கள்

• ஆபிரகாம் தேவனுக்கு முதன்முதலில் பலிபீடம் கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்ட இடம் இது.

• யாக்கோபு தனது சகோதரன் ஏசாவிடமிருந்து தப்பி ஓடியபோது, இந்த இடத்தில்தான் சொப்பனத்தில் தேவனை முதன்முதலில் சந்தித்தார். 'உன் சந்ததி பூமியின் தூளைப் போலிருக்கும்' என்று யாக்கோபுக்கு தேவன் வாக்குறுதி அளித்ததும் இங்குதான்.

• நியாயாதிபதிகளின் காலத்தில் தேவனுடைய உடன்படிக்கையின் பெட்டி சில காலம் பெத்தேலில் தங்கியிருந்தது. மேலும் ஆசாரியர்கள் இங்கு கர்த்தருடைய சந்நிதியில் சர்வாங்க தகனபலிகளையும் சமாதான பலிகளையும் இட்டு, கர்த்தரிடத்தில் விசாரித்தார்கள்.

• பெத்தேல் இஸ்ரேலின் முக்கிய வழிபாட்டு மையங்களில் ஒன்றாக இருந்தது. துன்ப காலங்களில் கர்த்தரைத் தேட மக்கள் அடிக்கடி அங்கு சென்றனர்.

## பெத்தேலின் அழிவு

• இஸ்ரவேல் ராஜ்ஜியம் பிரிக்கப்பட்ட பிறகு, வடக்கு ராஜ்யத்தின் ராஜாவான யெரொபெயாம், பொன்னினால் இரண்டு கன்றுக்குட்டிகளை உண்டாக்கி, ஜனங்களைப் பார்த்து, ''இதோ, இவைகள் உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின உங்கள் தேவர்கள்'' என்று சொல்லி, ஒன்றைப் பெத்தேலிலும், ஒன்றைத் தாணிலும் ஸ்தாபித்தான் (1 இராஜா. 12:26-29).

• பெத்தேலில் பொன் கன்றுக்குட்டிகளை எழுப்பியதை பற்றி கர்த்தர் யெரொபெயாமை தீர்க்கதரிசியைக் கொண்டு பலமுறை எச்சரித்தும் கர்த்தரின் எச்சரிக்கைக்கு யெரொபெயாம் செவிசாய்க்கவில்லை (1 இராஜா. 13:1-34).

• யெரொபெயாம் மற்றும் அடுத்தடுத்த மன்னர்களின் தொடர்ச்சியான கீழ்ப்படியாமை, பெத்தேலின் அழிவுக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

• கி.மு. ஏழாம் நூற்றாண்டில், கர்த்தருடைய தீர்க்கதரிசி உரைத்த தீர்க்கதரிசனம் நிறைவேறும் விதமாக, யூதாவின் ராஜா யோசியாவால் பெத்தேலின் உயரமான இடங்கள் அவரது மத சீர்த்திருத்தங்களின் ஒரு பகுதியாக அழிக்கப்பட்டன (2 இராஜா. 23:4,13-19).

• இறுதியில், எஸ்றாவின் காலத்தில், பெத்தேல் நகரம் எரிக்கப்பட்டு ஒரு சிறிய கிராமமாக மாறியது (எஸ்றா 2:28). புதிய ஏற்பாட்டில் பெத்தேல் முற்றிலும் மறைந்தது எங்கும் குறிப்பிடப்படவில்லை.



# 8 MARCH பெண்கள் தினம்
## International Women's Day

18ம் நூற்றாண்டில் பெண்கள் வீட்டு வேலைக்கு மட்டுமே என்று முடக்கி வைத்திருந்தார்கள். 1850களில் தொழிற்சாலை, அலுவலகம் உள்ளிட்ட இடங்களில் பெண்கள் கால்பதிக்க ஆரம்பித்தார்கள். ஆனால் ஊதியத்தில் பாகுபாடு காட்டப்பட்டது. இதைக் கண்டு கொதித்தெழுந்த பெண்கள் 1910ம் ஆண்டு டென்மார்க் கோபன்ஹேகனில் மாபெரும் பெண்கள் உரிமை மாநாட்டை நடத்தினார். இந்த மாநாட்டில் உலக நாடுகளைச் சேர்ந்த பல பெண்கள் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர். அதில் கலந்து கொண்ட ஜெர்மனியை சேர்ந்த கிளாரா ஜெட்கின், பெண்களின் உரிமைகளை பேச உலகம் முழுவதும் ஒரு குறிப்பிட்ட நாளை பெண்கள் தினமாக கடைபிடிக்க வேண்டுமென்று தீர்மானித்து மார்ச் 8ம் தேதி மகளிர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. 21ம் நூற்றாண்டில் பெண்கள் சாதிக்காத துறைகளே இல்லை என்று சொல்லலாம். அப்படி சாதித்த 2 பெண்களின் சாதனை...

### ஆசியாவின் முதல் பெண் இரயில் ஓட்டுனர் - சுரேகா யாதவ்...



இந்தியாவின் மஹாராஸ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த சுரேகா யாதவ் முதல் பெண் இரயில் ஓட்டுனர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். இந்திய இரயில்வே துறையில் 1988ம் ஆண்டு தன் பணியைத் துணிந்து துவங்கியுள்ளார். 1989ல் இரயில் உதவி ஓட்டுனர் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இவர் முதன்முதலாக ஓட்டிய சரக்கு இரயிலின் எண் L-50 ஆகும். இது வாடிபந்தருக்கும் கல்யாணுக்கும் இடையில் இயங்கியது. 1996ல் சரக்கு இரயிலின் ஓட்டுனர் ஆக்கப்பட்டார். 1998ல் முழு நீள சரக்கு இரயிலின் ஓட்டுனரானார். 2011 மே மாதம் அதிவிரைவு இரயில் ஓட்டுனராக உயர்ந்தார். சுரேகாவிற்கு இருசக்கர வாகனமோ, காரோ ஓட்டத் தெரியாது. ஆனால் 12 பெட்டிகளைக் கொண்ட இரயிலில் 4500 பயணிகளை வெற்றிகரமாக ஏற்றிச் சென்று சாதனை புரிந்துள்ளார்.

### இந்தியாவின் முதல் பெண் விமானி - சர்லா துக்ரல்...



1914ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8ம் தேதி டெல்லியில் பிறந்த இவர் பாகிஸ்தானில் இருக்கும் லாகூர் நகருக்கு குடிபெயர்ந்தார். அவரது கணவர் இராணுவத்தில் விமானியாக பணிபுரிந்தார். இதைக் கண்டு சர்லா துக்ரலுக்கும் விமானியாக வேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டது. 21 வயதில் இரட்டை இன்ஜின் கொண்ட சிறு விமானத்தை முதல் முறையாக இயக்கினார். இதன் மூலம் இந்தியாவிலேயே விமானத்தை இயக்கிய முதல் பெண் என்ற சாதனையை அவர் படைத்தார். அத்துடன் நிற்காமல் லூகார் விமான பயிற்சி நிலையத்தில் 1000 மணி நேர பயிற்சியையும், வெற்றிகரமாக முடித்து, இந்தியாவின் முதல் பெண் விமானி என்ற சிறப்பையும் பெற்றார்.

**அன்பானவர்களே! பெண்களாலும் சாதிக்க முடியும் என்பதை சுரேகா யாதவ், சர்லா துக்ரல் சாதனையை படித்து அறிந்திருப்பீர்கள். அநேக பெண்கள் நான் பெலவீனமான பாண்டம், என்னால் முடியாது என்று தங்களுடைய தாலந்துகளை மறைத்து வைத்திருக்கிறீர்கள். இன்றைக்கே அந்த எண்ணத்தை உதறி தள்ளிவிட்டு எழும்பி முன்னேறி சென்று சாதிக்க முற்படுங்கள்! இன்றைய இளம் தலைமுறையினர் தங்கள் தாலந்துகளை இன்றே வெளிப்படுத்துங்கள்.**

# ACHIEVERS 2023

## தேர்வு எழுதும் மாணவர்களுக்கான கூடுகை!

ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் தேர்வு எழுதும் மாணவர்களுக்கான கூடுகை நாலுமாவடி தேவனுடைய கூடாரத்தில் வைத்து நடைபெற்று வருகிறது. இந்த வருடம் ஜனவரி 26, 2023 அன்று நடைபெற்ற கூடுகையில் சுமார் 3000க்கும் அதிகமான மாணவ மாணவியர் கலந்து கொண்டனர். அநேக பள்ளிக் கல்லூரிகளிலிருந்து ஆசிரியர்கள் தங்களுடைய மாணவர்களை இக்கூடுகையில் பங்கு பெற உற்சாகப்படுத்தி அழைத்து வந்தனர். தேர்வைக் குறித்த பயம், கலக்கம், மறதி, வியாதி போன்ற பல பிரச்சனைகளோடு வந்த மாணவர்கள், பயம் நீங்கி, கலக்கம் மாறி வியாதியிலிருந்து விடுதலைப் பெற்று, ஜெயம் பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் கடந்து சென்றனர். வந்திருந்த மாணவ மாணவியருக்கு “ஜெயம் கொடுக்கும் தேவன்” என்ற தலைப்பில் சகோ. மோகன் சி.லாசரஸ் அவர்கள் ஆலோசனைக் கொடுத்து தனித்தனியாக ஜெபித்து அனுப்பினார்கள். டாக்டர். அன்புராஜன் அவர்கள் வந்திருந்த மாணவர்களுக்கு தேர்வுக்கான டிப்ஸ் கொடுத்தார்கள். வந்திருந்த ஒவ்வொரு பிள்ளைகளும் புதுநம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் கடந்து சென்றனர்.







*தேவனுக்கே மகிமை!*



























சிறப்புக் கட்டுரை: காட்வின்

# பெலப்படுத்தும் தேவன்


ஹாய் அன்பான தம்பி, தங்கச்சி! உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள். வாலிபர் உலகம் பத்திரிக்கை மூலமாக ஒவ்வொரு மாதமும் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டு வருகிறீர்கள் என விசுவாசிக்கிறேன். இந்த வாலிப வயதில் என்னதான் மகிழ்ச்சியான தருணம் நமக்கு அமைந்தாலும் சில வேளைகளில் நாம் பெலவீனம் அடைந்து விடுகிறோம். ஏதோ ஒரு காரியம் நம்மை துக்கத்தில் ஆழ்த்திவிடுகிறது. சில வேளைகளில் எந்தவொரு காரியத்திலும் வெற்றியே காணாமல், தோல்வியை மட்டுமே கண்டதாக நம் மனம் எண்ணுகிறது. இந்த சூழலில் ஒன்றை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, "...நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன்,..." (2 தீமோ. 1:12) என்று கூறுகிறதை நாம் நினைவு கூர்ந்து பார்க்க வேண்டும். சர்வ உலகத்தையும் படைத்த தேவன் என்னோடு இருக்கிறார் என்ற விசுவாசம் நமக்கு வேண்டும்.

உங்களுக்கு ஒரு சம்பவம் சொல்ல ஆசைப்படுகிறேன்...

கடந்த (2023) பிப்ரவரி மாதம் ஜெபிக்கலாம் வாங்க நிகழ்ச்சியில் தேர்வு எழுதும் மாணவர்களுக்காக சிறப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அதில் ஒரு சகோதரர் கூறிய சாட்சி எங்களுக்கு மிகவும் பிரமிப்பை ஏற்படுத்தியது. உங்களுக்கும் அதை பகிர விரும்புகிறேன்.

சென்னையில் IT நிறுவனத்தில் தூய்மை பணியாளராக பணிபுரிந்த ஒரு வாலிபர், 6 வருட இடைவெளியில் அதே IT கம்பெனியில் மென்பொருள் பணியாளராக இணைந்து பணியாற்றினார். எப்படி தெரியுமா?



தான் படிக்கும் காலத்தில் சரியாக படிக்க வசதிகள் இல்லாத சூழ்நிலையால் படிக்க இயலாமல், 7ம் வகுப்பு முடித்து விட்டு வேலைக்கு சென்று விட்டார். ஒவ்வொரு இடங்களாக வேலைக்கு சென்று கடைசியாக 22 வயதில் ஒரு பிரபல IT கம்பெனியில் தூய்மைப்படுத்தும் பணிக்கு ஆள் தேவை என்பதை அறிந்து அங்கு சேர்ந்தார். வாலிப வயதிலேயே அநேகர் அந்த ஐடி கம்பெனியில் நல்ல வேலையில், நல்ல நிலமையில் இருப்பதை பார்த்து, இந்த வாலிபருக்கு ஏக்கம் உண்டாகிறது. தன்னைப் போன்ற வாலிபர்கள் இப்படி நல்ல நிலையில் வேலை பார்க்கும் சூழ்நிலையில், தான் மட்டும் ஏன் இந்த நிலமையில் இருக்கிறேன் என்று அடிக்கடி வேதனைப்பட்டது உண்டு. ஒரு சமயம் அந்த கம்பெனியில் வேலை செய்யும் ஒரு சகோதரி இவரை கண்டு விசாரித்த போது தன்னுடைய நிலமையை எடுத்து கூறியுள்ளார். அப்போது அந்த சகோதரி எந்த சூழ்நிலையிலும் இயேசு உங்களுக்கு உதவி செய்ய முடியும். இந்த வயதிலும் நீங்கள் மீண்டும் படித்து முன்னேற முடியும் என்று நம்பிக்கை வார்த்தைகளைக் கூறி இருக்கிறார். அவர் கூறிய நம்பிக்கை வார்த்தைகளைக் கேட்டு இயேசுவின் மேல் நம்பிக்கை வைத்து அந்த வாலிபன் ஜெபித்திருக்கிறார்.

ஐடி கம்பெனியில் தூய்மை பணிக்காக செல்லும் அவர், சில வேளைகளில் மீட்டிங் நடக்கும் இடத்திற்கு செல்லும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அப்போது அவர்கள் சரளமாக ஆங்கிலத்தில் பேசுவதைப் பார்த்து தனக்கும் ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்று ஆசை உருவாகி அதற்காகவும் ஜெபிக்க தொடங்கினார். அவர்கள் பேசுவதை உற்று கவனித்து அதிலிருந்து கற்றுக் கொள்ள முயற்சி செய்தார். பின் அந்த சகோதரி கூறிய ஆலோசனை மூலம் தன்னால் மீண்டும் படிக்க முடியும், பலன் அடைய முடியும் என்ற நம்பிக்கையை பெற்று 24ம் வயதில் எட்டாம் வகுப்பு படிப்பதற்கு விண்ணப்பித்தார். பின் அந்த எட்டாம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி அடைந்து நேரடியாக பத்தாம் வகுப்பு தேர்வுக்கு விண்ணப்பித்து, பத்தாம் வகுப்பிலும் தேர்ச்சி அடைந்தார். பத்தாம் வகுப்பு படிக்கும் போதே டைப் ரைட்டிங் படித்தார். அதே சூழ்நிலையில் வாழ்வாதாரத்திற்கு பணம் தேவை என்பதால் இரவு நேரத்தில் வேலைக்கு சென்று சம்பாதிப்பார். இப்படி தன் வாழ்க்கையில் ஒவ்வொருநாளும் தூக்கத்தை எல்லாம் தொலைத்து பெலன் எல்லாம் இழந்து படிக்க முயற்சி செய்தார். ஆகிலும் அவருக்கு இருந்த ஒரே ஒரு நம்பிக்கை "இயேசு". "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு." (பிலிப்பியர் 4:13) என்ற அந்த வசனம் தந்த நம்பிக்கை இன்னும் அதிகமாய் அவரை பிரயாசப்பட செய்தது. அதன்பின் 6 வருடங்கள் கழித்து கல்லூரி படிப்பையும் முடித்து, எந்த IT கம்பெனியில் கழிவறையை சுத்தம் செய்யும் பணியாளராக இருந்தாரோ, அதே கம்பெனியில் மற்ற வாலிபர்களைப் போலவே மென்பொருள் ஊழியராக பணியில் சேர கர்த்தர் உதவி செய்தார். இந்த உலகத்தை படைத்த தெய்வம் என்னுடன் இருக்கிறார். எல்லாவித பெலவீனத்தையும் நீக்க அவர் வல்லவர் என்ற விசுவாசம் அவரை இந்த நிலைக்கு உயர்த்தியது.

எனக்கு அன்பான வாலிபர்களே! உங்கள் வாழ்விலும் ஏதாகிலும் பெலவீனம் இருக்கலாம், படிக்க முடியாமல் சோர்வு ஏற்படலாம், சரீரத்தில் பெலவீனம் காணப்படலாம், ஏதோ ஒரு காரியத்தை அடிக்கடி முயற்சி செய்து அவை நடக்காமல் அல்லது வெற்றி பெற முடியாமல் இருக்கலாம், நம் இயேசு "சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்" (ஏசாயா 40:29) என்பதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். அவர் உங்களுக்கு பெலன் தருவார். உங்கள் சோர்வுகளில் பெலப்படுத்துவார். சூழ்நிலைகள் எல்லாம் எதிராக இருந்தாலும், நம்பினவர்கள் கூட கைவிட்டாலும் உங்களை பெலப்படுத்தும் தெய்வம் உங்கள் அருகிலேயே இருக்கிறார். ஆனால் நீங்கள் அவருக்கு காத்திருக்க வேண்டும். அவரை முழுவதும் விசுவாசிக்க வேண்டும்.

"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்" (ஏசாயா 40:31).

சிறப்பு கட்டுரை: கெத்சி கிளார்வின்

யோசனையில் பெரியவர்!

# யோசபாத்



**வேதாகமத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு பல போராட்டங்களும், யுத்தங்களும் எழும்பின. ஆனால் சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் அந்த பிரச்சனைகளிலிருந்து அவர்களை எப்படி விடுவித்தார் என்பதை இந்த "யோசனையில் பெரியவர்" என்கிற தொடரின் வாயிலாக பார்த்து வருகிறோம். கடந்த மாதம் செங்கடல் என்கிற பெரிய தடையை தேவன் எப்படி மாற்றினார் என்பதை பார்த்தோம்.**

**இந்த மாதம் யோசபாத் என்கிற யூதாவின் ராஜாவைக் குறித்து பார்க்கலாம். யோசபாத் என்னும் யூத தேசத்தின் ராஜா, கர்த்தருக்கு பயந்து, அவருடைய கற்பனைகளின்படி வாழ்ந்து, கர்த்தரை விட்டு விலகியிருந்த இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தர் பக்கமாய் திருப்பினவர். இப்படி கர்த்தரால் விரும்பத்தகும் வாழ்க்கை வாழும் நபருக்கு போராட்டங்கள் வரக்கூடுமா?**

## ஆம் வரக்கூடும்!

யூதா தேசத்தை சமாதானமாக வழிநடத்தி வந்த யோசபாத் ராஜாவிற்கு எதிராக மோவாப் புத்திரர், அம்மோனியர் மற்றும் சேயீர் மலை தேசத்தினர் என்று மூன்று தேசத்தினர் யுத்தம் பண்ண வந்தனர். இப்படி ஒரு சூழ்நிலையில் எந்த ராஜாவும் தன் படைத்தளபதிகளிடம் ஆலோசனை செய்திருப்பான். ஆனால் யோசபாத் இந்த சூழ்நிலையை எப்படி கையாண்டார்?

இந்த யுத்தம் எதிர்பாராமல் இருந்தாலும், யோசபாத் நிதானத்தோடு கர்த்தரை தேடுவதற்கு தன்னையும், தன் தேசத்தையும் ஒருமுகப்படுத்தி, தேசமெங்கும் உபவாசித்து ஜெபிக்க துவங்கினர். அப்பொழுது கர்த்தரின் தீர்க்கதரிசன வார்த்தை 'இந்த யுத்தம் உங்களுடையதல்ல தேவனுடையது' என்று அவர்களுக்கு வெளிப்பட்டது.

நம் வாழ்வில் எதிர்பாராமல் வரும் எந்த பிரச்சனைகளுக்கும், போராட்டங்களுக்கும் மனிதர்களோ, நம் சுய பலமோ, ஞானமோ தீர்வு அல்ல. இதை அறிந்த யோசபாத் ராஜா தன்னிடம் இருந்த படை பலம், ஆள் பலம் ஆகியவற்றை முதலில் வைக்காமல் கர்த்தரையே முன்பாக வைத்து ஜெபித்தார்.

வழக்கமாக எந்த யுத்தத்திற்கும் யுத்த வீரர்களை அனுப்புவார்கள். ஆனால் யோசபாத், கர்த்தரை துதிக்கிற துதி சேனையை முன்பாக அனுப்பினார். அவர்கள் துதிக்க, துதிக்க மூன்று தேசத்தின் படைகள் தங்களுக்குள் ஒருவரையொருவர் வெட்டி வனாந்திரத்தில் அழிந்தனர். எவ்வளவு பெரிய வெற்றி அல்லவா? யூதா தேசத்தின் வீரர்கள் பட்டயத்தை உருவவுமில்லை, இரத்தம் சிந்தவுமில்லை, பிரயாசப்படவுமில்லை, ஒருவரை கூட இழக்கவுமில்லை. ஆனால் சத்துருக்கள் சங்கரிக்கப்பட்டார்கள்.

**அன்பு வாலிபர்களே! நம் தேவன் 'யோசனையில் பெரியவர்'. அவர் வழிகள் நம் வழிகளைவிட உயர்ந்தது. நம் வாழ்வில் துதியும், ஜெபமுமே பிரச்சனைகளை மேற்கொள்ள நமக்கு கொடுக்கப்பட்டுள்ள ஆயுதங்கள். இதை சரியாக நாம் பயன்படுத்தும்போது தான், கர்த்தர் நமக்காக இயற்கைக்கு மேற்பட்ட அற்புதத்தை செய்ய முடியும், ஜெயத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.**

**"என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்"** (ஏசாயா 55:8).



# ஜெபக்குறிப்புகள்

## மார்ச் - 2023






ஜெபம்: பெனிட்டா

**1** சுமார் 11.5 கோடி ஆண் பிள்ளைகள் திருமண பந்தத்திற்குள்ளாகியிருக்கின்றனர். ஒவ்வொரு சிறாரின் மனநிலையில் மாற்றம் உண்டாக ஜெபிப்போம்.

**2** உலகளவில் திருமணமாகி வாழ்ந்து கொண்டிருக்கும் சுமார் 6 கோடி சிறுமிகளின் வாழ்க்கையில் மாற்றம் உண்டாக ஜெபிப்போம்.

**3** உலகளவில் 2 வயது முதல் 17 வயது வரையுள்ள சிறு பிள்ளைகளில் சுமார் 10 கோடி சிறுவர்கள் பாலியல் வன்கொடுமையினால் பாதிக்கப்படுவது தடுக்கப்பட ஜெபிப்போம்.

**4** இந்திய தேசத்தில் ஊசி வாயிலாக போதை ஏற்றிக் கொள்ளும் சுமார் 8.50 லட்சம் பேர் மனந்திரும்ப ஜெபிப்போம்.

**5** மூக்கு வழியாக உள்ளிழுக்கும் போதைக்கு அடிமைப்பட்டிருக்கும் சுமார் 4.60 லட்சம் சிறுவர்களும், சுமார் 18 லட்சம் பெரியவர்களும் இந்த அடிமைத்தனத்திலிருந்து வெளிவர ஜெபிப்போம்.

**6** இந்தியாவில் பான்பராக், ஹான்ஸ் போன்ற போதைப் பொருட்களை உபயோகிக்கும் சுமார் 24 கோடி பேர் இந்த அடிமைத்தனத்திலிருந்து வெளிவர ஜெபிப்போம்.

**7** உலகம் முழுவதும் உள்ள மக்கள் தொகையில் 3.6 சதவீதம் முதல் 6.6 சதவீதம் மக்கள் போதைப் பழக்கத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். இந்த மக்கள் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

**8** போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி தற்கொலை செய்து தங்களது உயிரை மாய்த்துக் கொள்ளும் இளம் வயதினர் மனந்திரும்ப ஜெபிப்போம்.

**9** கடந்த 10 ஆண்டுகளில் போதைப் பொருட்களை பயன்படுத்துவதனால் ஏற்படும் நோய்களினால் சுமார் 71% பேர் இறந்துள்ளனர். இனியும் இப்படிப்பட்ட மரணங்கள் ஏற்படாமல் தடுக்கப்பட ஜெபிப்போம்.

**10** தேசத்திலுள்ள பெண்களை தேவன் பாதுகாத்துக் கொள்ளவும், எல்லாத் துறையிலும் அவர்கள் முன்னேறி செல்லவும் ஜெபிப்போம்.

**11** பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தடுக்கப்படவும், தவறான வழியில் நடக்கும் பெண்கள் மனந்திரும்பவும் ஜெபிப்போம்.

**12** பெண்களுக்கு எதிரான பாலியல் கொடுமைகள் தடுக்கப்படவும், பெண்களை தேவன் பாதுகாத்துக் கொள்ளவும் ஜெபிப்போம்.

**13** உலக மக்கள் தொகையில் சுமார் 65 கோடிக்கும் அதிகமாக உள்ள, மாற்று திறனாளிகளின் பாதுகாப்பிற்காகவும், இரட்சிப்பிற்காகவும் ஜெபிப்போம்.

**14** ஊனமுற்ற சிறார்களில் 90% பேர் பள்ளிக்கு செல்லாமல் இருப்பதால் இவர்களது எதிர்காலம் பாதிக்கப்படுவது தடுக்கப்படவும், தகுந்த கல்வி கிடைக்கவும் ஜெபிப்போம்.

**15** ஊனமுற்றவர்களின் வறுமை முற்றிலும் ஒழிக்கப்படவும், அவர்களது வறுமை நிலை மாற அரசு உதவிகள் கொடுத்து உதவ முன்வர ஜெபிப்போம்.

**16** நம் தேசத்தில் ஒரு லட்சம் பேரில் 300 பேர் காச நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சுகம் பெற ஜெபிப்போம்.








**17** இந்திய அளவில் காச நோயினால் 4-5 சதவீதம் இறப்பு விகிதமாக இருக்கிறது. காச நோய் முற்றிலும் அழிக்கப்பட்டு மரணங்கள் தடுக்கப்பட ஜெபிப்போம்.

**18** காச நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்ல சிகிச்சைகள் அழிக்கப்படவும், விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவும் ஜெபிப்போம்.

**19** ஆப்கானிஸ்தானில் மோசமான வறட்சி மற்றும் ஆட்சி மாற்றம் காரணமாக பொருளாதார நெருக்கடியினால் பட்டினியால் பாதிக்கப்பட்ட 2 கோடியே 30 லட்சம் மக்களின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**20** அத்தியாவசிய தேவைகளான உணவு, மருந்து, குடிநீர் உள்ளிட்ட பொருட்கள் இல்லாமல் 5 வயதுக்குட்பட்ட ஒரு கோடி குழந்தைகள் தவித்து வருகின்றனர். இவர்களுக்கு உதவிகள் கிடைக்கப்பெற ஜெபிப்போம்.

**21** வறுமை மற்றும் பாவ சாபக்கட்டுகளில் இருந்து ஜனங்கள் விடுதலை அடையும்படிக்கும், தேவனுக்கு பிரியமில்லாத காரியங்கள் இத்தேசத்தை விட்டு அகன்று போகும்படிக்கு ஜெபிப்போம்.

**22** தமிழகத்தில் இந்த ஆண்டு 12ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதவிருக்கும் 8,52,000க்கும் அதிகமான மாணவ, மாணவியர்களின் தேர்வு பயம் நீங்க ஜெபிப்போம்.

**23** தமிழகத்தில் இந்த ஆண்டு 10ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதவிருக்கும் 9,38,000க்கும் அதிகமான மாணவ மாணவியர்களுக்காக ஜெபிப்போம்.

**24** தேர்வு நாட்களில் மாணவ மாணவியருக்கு எந்த வியாதிகளோ, குடும்பத்தில் பிரச்சனைகளோ ஏற்படாதவாறு தேவன் பாதுகாத்துக் கொள்ள ஜெபிப்போம்.

**25** படிப்பதற்கு நல்ல கால சூழ்நிலை உண்டாகவும், நல்ல ஞாபக சக்தி கிடைக்கவும், படிக்கிற பாடங்கள் மனதில் ஆழமாக பதியவும் ஜெபிப்போம்.

**26** படிப்பதற்கு ஏற்படும் தடைகள், மற்றும் சோர்வுகள் முற்றிலும் அழிக்கப்பட ஜெபிப்போம்.

**27** தேர்வைக் குறித்திருக்கிற பயங்கள் நீங்கி, மனதில் தைரியமும், மகிழ்ச்சியும் உண்டாக ஜெபிப்போம்.

**28** நம் தேசத்தில் உள்ள சபைகளில் உள்ள விசுவாசிகள், போதகர்கள் மத்தியில் எழுப்புதல் உண்டாக ஜெபிப்போம்.

**29** கள்ளப் போதனைகளை சபைகளுக்குள் கொண்டு வருகிறவர்களை ஜனங்கள் அடையாளம் கண்டு கொண்டு எச்சரிக்கையாக இருக்க ஜெபிப்போம்.

**30** இந்தியாவில் இருக்கும் அனைத்து திருச்சபைகளும் சுவிசேஷம் அறிவிக்கும் சபைகளாக மாற ஜெபிப்போம்.

**31** சபைகள் மற்றும் ஊழியர்களுக்கு எதிராக கிரியை செய்யும் சாத்தானின் திட்டங்கள் அழிக்கப்பட ஜெபிப்போம்.

**தினமும் ஒரு நிமிடம் எடுத்து அன்றைய தேதியில் கொடுக்கப்பட்டுள்ள ஜெபக்குறிப்புக்காக முழுமனதோடு கருத்தாய் ஜெபியுங்கள்!**

எழுப்புதல் செய்தி: சதீஷ்



# சுவிசேஷ எழுப்புதல்

பாவத்திலும் சாபத்திலும் இருக்கும் ஜனங்களைத் தேடிச் சென்று இயேசுவின் நற்செய்தியை அறிவித்து, இருளில் இருக்கும் ஜனங்களை வெளிச்சத்தின் பிள்ளைகளாக மாற்றுவதுதான் சுவிசேஷம் ஆகும். இயேசு சமாரியா ஸ்திரியை சந்தித்து இரட்சிப்பின் செய்தியை சொன்னபோது அவள் ஏற்றுக் கொண்டது மட்டுமின்றி, முழு சமாரியா பட்டணத்திற்கும் சென்று நற்செய்தியை அறிவித்து, அநேகரை கிறிஸ்துவின் மேல் விசுவாசமுள்ளவர்களாக மாற்றினாள். இந்த சுவிசேஷ பணி ஆதி அப்போஸ்தலர்கள் நாட்கள் தொடங்கி இன்று வரைக்கும் உலகம் முழுவதும் சொல்லப்பட்டு வருகிறது. எத்தியோப்பியருடைய ராஜஸ்திரியாகிய கந்தாகே என்பவளின் மந்திரி எருசலேம் பட்டணத்திற்கு வரும்போது எப்படிப்பட்ட மனநிலையோடு வந்தார் என்று தெரியாது. ஆனால் திரும்பி செல்லும்போதோ ''...சந்தோஷத்தோடே தன் வழியே போனான்'' (அப். 8:39). அவருடைய சந்தோஷத்திற்கு, பிலிப்பு என்ற சுவிசேஷகன் சொன்ன நற்செய்திதான் காரணம். எல்லா ஜனத்திற்கும் சந்தோஷத்தைத் தரக்கூடிய சுவிசேஷம் எங்கு அறிவிக்கப்படுகிறதோ அங்கு சமுதாய மாற்றம் என்ற ''உயிர்மீட்சி'' (எழுப்புதல்) உண்டாகிறது.

இங்கிலாந்தின் வேல்ஸ் பகுதியில் உண்டான எழுப்புதலின் விளைவாக இங்கிலாந்திலிருந்தும் ஜெர்மனியிலிருந்தும் பல மிஷனெரிகள் தங்களை சுவிசேஷ பணிக்கு அர்ப்பணித்து இந்தியாவின் வடகிழக்கு பகுதிகளுக்கு குடியேறினார்கள். இப்பகுதிகளில் நாகா என்ற பழங்குடி இன மக்கள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் சமுதாய வழக்கப்படி ஆண்கள் தங்கள் வாழ்நாளில் எத்தனை மனிதத் தலைகளை உயிரோடு இருக்கும் போது வெட்டி சேகரிக்க முடியுமோ, அத்தனையும் சேகரிக்க வேண்டும். பின்பு அந்த தலைகளை தன் வீட்டின் சுவரில் மாட்டி வைக்க வேண்டும். இதை வைத்துதான் அவனுக்கு பெண்ணை திருமணம் செய்து வைப்பார்கள். தன்னுடைய திருமணம் நன்றாக நடக்க வேண்டும் என்பதற்காகவே பழங்குடி இன வாலிபர்கள் தங்களால் இயன்ற அளவு மனிதத் தலைகளை வெட்டி சேகரிப்பார்கள். இக்கொடூரமான ஆதிவாசிகளின் மத்தியில் சுவிசேஷ ஒளியை சுமந்து கொண்டு, பல மிஷனெரிகள் தங்கள் ஜீவனைக் கொடுத்து இயேசுவைப் பற்றிய நற்செய்தியை (சுவிசேஷம்) அறிவித்தார்கள். இவர்களின் தன்னலமற்ற சுவிசேஷ தாகமும் அர்ப்பணிப்பும் ஒரு ஆதிவாசி இனத்தை (நாகா) இயேசுவண்டை வழிநடத்தியது. அன்று சந்திக்கப்பட்ட இந்த நாகா இனம்தான், இன்று இந்தியாவில் அதிக கிறிஸ்தவர்கள் வாழும் நாகலாந்து மாநிலமாக மாறியது. ''அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான்'' (சங். 126:6) என்ற வசனத்தின்படி அன்று மிஷனெரிகள் கண்ணீரோடு இயேசுவை விதைத்தின் விளைவு ஒரு மாபெரும் எழுப்புதலை நாகலாந்தில் கொண்டு வந்தது.



**எனக்கன்பான வாலிபர்களே! நம் இந்திய தேசம் முழுவதும் பாவத்திலும், சாபத்திலும், தரித்திரத்திலும் வாழும் திரளான ஜனங்கள் இருக்கின்றனர். இவர்களின் மத்தியில் சுவிசேஷத்தை அறிவிக்க எந்தவொரு வெளிநாட்டவரையும் எதிர்பார்க்காமல், நீங்களே சுவிசேஷத்தின் ஒளியை சுமந்து செல்கிற ஒரு சுவிசேஷகனாக, மிஷனெரியாக சென்றால் மட்டுமே ஒரு மாபெரும் எழுப்புதலை நம் தேசம் சந்திக்க முடியும்! ■**





வேத ஆராய்ச்சி: ரேச்சல்

# ஆபகூக்

## (குழப்பத்திற்கு தீர்வு)

அன்பான இளம் நெஞ்சங்களே! இந்த மாதம் சிறிய தீர்க்கதரிசன நூல்களில் எட்டாவது புத்தகமான 'ஆபகூக்' பற்றி சுவாரஸ்யமான தகவல்களை சுருக்கமாகக் காணலாம்.

### அறிமுகம்

தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனம் தங்கள் அடிமைத்தனத்தின் சிறையிருப்பில் ஏன் துன்பப்பட அனுமதிக்கப்படுகிறார்கள் என்பதற்கான பதிலுக்காக ஆபகூக் தேவனிடம் மன்றாடுவதன் மூலம் ஆபகூக் புத்தகம் தொடங்குகிறது (ஆபகூக் 1:1-4). 2ம் அதிகாரத்தில், இக்கேள்விக்கு விடை தரமுற்படுகிறார். 3ம் அதிகாரத்தில், கடினமான காலத்திலும் போதிய ஆற்றலையும் அரவணைப்பையும் தேவனிடம் காண்கிறார் ஆபகூக். ஊக்கமான விசுவாசம் பலன் தரும், எவ்வளவாய்க் குறைவுபட்டாலும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் என்ற மேலான கருத்தை முடிவில் கூறுகிறார்.

ஆசிரியர்: ஆபகூக்

காலம்: கி.மு. 607

அதிகாரங்கள்: 3

வசனங்கள்: 56

வார்த்தைகள்: 1,476

முக்கிய நபர்கள்: ஆபகூக்



### ஆபகூக் சுருக்கம்

- ஆபகூக்கின் குழப்பம்: விசுவாசம் சோதிக்கப்பட்டு கற்பிக்கப்படுகிறது (1,2 அதிகாரங்கள்)
- முதல் குழப்பம்: யூதாவில் தேவன் ஏன் அநீதியை அனுமதிக்கிறார்? (1:1-17 வசனங்கள்)
- தேவனுடைய பதில்: இம்முதல் முறையீட்டுக்கு மறுமொழியாய் இறைவன் (கார்கிமேஷின் போருக்குப்பின்) யூதரைத் தண்டிக்க கல்தேயரை அனுப்புகிறார் (1:5-11 வசனங்கள்)
- இரண்டாவது குழப்பம்: தங்களைவிட அதிக நீதியுள்ள மக்களைத் தண்டிக்க ஒரு நீதியுள்ள கடவுள் எவ்வாறு பொல்லாத பாபிலோனியாவைப் பயன்படுத்த முடியும்? (1:12; 2:1 வசனங்கள்)
- தேவனுடைய இரண்டாவது பதில்: பாபிலோனியா தண்டிக்கப்படும், ''விசுவாசத்தினாலே நீதிமான பிழைப்பான்'' (2:2-20 வசனங்கள்)
- ஆபகூக்கின் துதி: விசுவாசம் வெற்றி பெறும் (3ம் அதிகாரம்)
- தேவனுடைய தனித்துவத்துக்காக அவரைத் துதித்தல் (3:1-3 வசனங்கள்)
- தேவனுடைய வல்லமைக்காகத் துதித்தல் (3:4-7 வசனங்கள்)
- தேவனுடைய நோக்கத்துக்காகத் துதித்தல் (3:8-16 வசனங்கள்)
- தேவன் மேலுள்ள நம்பிக்கைக்காகத் துதித்தல் (3:17-19 வசனங்கள்)

### ஆபகூக்கில் கிறிஸ்து

ஆபகூக்கில் கிறிஸ்து நீதியுள்ளவராகவும் (1:5,6), நித்திய தேவனாகவும், பரிசுத்தராகவும் (1:12), விசுவாசத்தால் பிழைக்க செய்பவராகவும் (2:4), இரட்சகராகவும் (3:13,14) சித்தரிக்கப்பட்டுள்ளார்.

# Revival IGNITERS

*Monthly Fellowship*

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் **IGNITERS** கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## EVERY 1ST SUNDAY (5TH MARCH)

**VELLORE (3PM)**
Gethsamane Prayer Center, Ajantha Mahal, # 3, 6th West Cross Road, Gandhi Nagar
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM – 6:30PM)**
Gethsamane Prayer Center, #62, 2nd Floor, Benny Kumaran Main Road. 9442082200

**TUTICORIN (3PM – 5:30PM)**
Gethsamane Prayer Center, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor Tiruchendur Road, Muniasamypuram Land mark : South Police Station to Kamaraj College Rd.
9442885315

**TIRUPATI (3PM)**
Old Community Hall, West Church
9985033401 / 9442885315

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
Gethsamane Prayer Center, Sekihnah Mahal, Mullai Nagar. 9750955548 | 8344949555

## EVERY 2ND SATURDAY (11TH MARCH)

**BANGALORE (3PM-5PM)**
Telugu Church, #21, Nethaji Road, Railway Line
Pulikeshi Nagar, Frazer Town.
Opp: BWSSB Office. 9962085523 | 9591077110

**MADURAI (3PM -5:30PM)**
American College Higher Secondary School, AC School Backside to Arumugam Hotel, Tallakulam Bus Stop.
9750955548 | 9344759316

## EVERY 2ND SUNDAY (12TH MARCH)

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School, Opp Rly.Station
9597927799 | 9442885315

**THANJAVUR (3PM)**
Gethsamane Prayer Center, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, MC Road
9444381971 | 9488475315

**KOVILPATTI (3PM -5:30PM)**
St. Paul's Matriculation School
9677859766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
P.M.V. Packiyavathy Building, R.A. Nursing Institute, SCV Computers (top Floor) Main Road, Near Union Office Opposite
9965377427 | 9750955548

**THENI (2:30PM – 5PM)**
Gethsamane Prayer Center, #203, Madurai Road, Opp. Anantham Silk Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:30PM)**
Jawarhalal Middle School
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
Gethsamane Prayer Center,
9677858766 | 9442906567

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher, Secondary School Mela Sathankulam. 9442885315

**CHENGALPET (3PM – 5:30PM)**
Blessing School, Tirukazhukundram Road
9488475315

**VILLUPURAM (3PM – 5:30PM)**
Gethsamane Prayer Center, HH Complex, Namnadu Textiles Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

## EVERY 3RD SUNDAY (19TH MARCH)

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsamane Prayer Center, Shah Complex,
#43/R4, Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9488212915

**COIMBATORE (4 PM)**
Gethsamane Prayer Center, #90, 1st Floor,
Arts College Road, Near Charan Tower,
0422 – 2309040 | 8903405315

**TRICHY (3 PM)**
Gethsamane Prayer Center, 22A, 1st Floor
Thennur High Road, Near KMC Bus Stop,
Thennur. 9488475315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram, Kadaiyam (via)
Tenkasi Dist. 8300131000 | 9750955548

**CHENNAI (3 PM)**
VGP Victory House, Mount Road
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**TIRUVARUR (3:30PM)**
Gethsamane Prayer Center,
1A/25B, Bypass Road (opp Arasu Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
Gethsamane Prayer Center, MBT Road,
Navalpur. 9500283179 | 9442885315

**ERODE (4PM – 6:30PM)**
Gethsamane Prayer Center, #216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

## EVERY 4TH SATURDAY (25TH MARCH)

**PERAMBALUR (5PM -8PM)**
Gethsamane Prayer Center, M K Complex,
71, Venkatesapuram, Near Bank of Baroda,
Trichy Main Road. 9788788512

## EVERY 4TH SUNDAY (26TH MARCH)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
Gethsamane Prayer Center, H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

**KRISHNAGIRI (3 PM – 5PM)**
Gethsamane Prayer Center, Near Arun Hospital
Royakottai Road. 9962085523 | 9524999711

## MUMBAI (5PM – 8PM)

1st SUNDAY - Dharavi
2nd SUNDAY – Bhandup
3rd SUNDAY - Malad

**9004882470**

LIVE STREAMING

Revival IGNITERS

ON SUNDAY 26TH MARCH,
TIME: 3:00 PM - 5:00 PM

IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP
*is telecasted live online in*
YouTube and Facebook
*on last sunday of every month*

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்

**சத்தியம்** TV **சனிக்கிழமை** 6:30 AM
7:00 A.m **Youtube மற்றும்**
**Comforter TV யிலும் பார்க்கலாம்**

Sathiyam TV YouTube Comforter DIGITAL CHANNEL

வாலிபர்களே!
உங்கள் நண்பர்களுக்கும்
அறிமுகப்படுத்துங்கள்.
அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி
மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட
ஆசீர்வாதங்களை எங்களுக்குத்
தெரியப்படுத்துங்கள்!
**9750955547**

சிறப்புக் கட்டுரை: ஜெயசீலன்

# வாக்குத்தத்தங்களும் நிபந்தனைகளும்



## அடங்கியிரு! ஆசீர்வதிப்பார்!!

அன்பு தம்பி, தங்கச்சி!

இன்னுமொரு புதிய மாதத்தில் உங்களை சந்திக்கச் செய்த இரட்சகராம் இயேசுவை மனதாரத் துதிக்கிறேன். உங்களில் அநேகர் பொதுத் தேர்வுக்கும், மருத்துவம், பொறியியல் மற்றும் பட்டமேற்படிப்புகளுக்கான தகுதி மற்றும் நுழைவுத் தேர்வுகளுக்கும் ஆயத்தமாகிக் கொண்டிருப்பீர்கள். வெல்லும் வாலிபர் கூட்டம் நீங்கள். வாழ்த்துகிறோம். வாகை சூடுவீர்கள்!

மீண்டும் உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். ஒவ்வொரு வாக்குத்தத்தத்திலும் நீ இதைச் செய்தால், நான் இதைச் செய்வேன் என்ற ஆண்டவரின் நிபந்தனைகளைக் (Conditions) காண முடியும். நிபந்தனை இல்லாத வாக்குத்தத்தங்களைக் காண்பது அரிது. ஒரு வாக்குத்தத்தம் நிறைவேற கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்படிவதும் அவசியமாயிருக்கிறது. இதை வேதாகம பக்தர்களின் அனுபவங்களைக் கொண்டு தியானித்து வருகிறோம். அந்த வரிசையில் இம்மாதம் ''ஆகார்'' என்ற பெண்ணைக் குறித்து அறிந்து கொள்ளலாம்.

## ஆகார்

ஆகார் என்பதற்கு ''அந்நிய ஸ்திரீ'' என்று பொருள். இவர் ஒரு எகிப்து தேசத்துப்பெண். எகிப்திய நாகரீகத்திலும், அறிவிலும், பண்புகளிலும் வளர்ந்தவர். அடிமைகளின் சட்டப்படி, ஆபிராம் - சாராயின் வீட்டிலே இப்பெண் வேலை செய்து வருகிறார். இந்த அடிமைப் பெண்ணாகிய ஆகாருக்கு, ''...உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்; அது பெருகி, எண்ணி முடியாததாயிருக்கும்'' (ஆதி. 16:10) என்று ஒரு பெரிய வாக்குத்தத்தைத் தந்த தேவனாகிய கர்த்தர், ஆதி. 16:9ல் ''...கர்த்தருடைய தூதனானவர்: நீ உன் நாச்சியாரண்டைக்குத் திரும்பிப்போய், அவள் கையின்கீழ் அடங்கியிரு'' என்ற ஒரு நிபந்தனையையும் விதிக்கிறார்.

ஆண்டவராகிய தேவன், ஆபிராம் - சாராய் தம்பதியினருக்கு ஒரு குழந்தையைத் தருவேன் என வாக்களித்து, சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் கொஞ்சி மகிழ ஒரு குழந்தை இல்லை. வயதும் அதிகரித்துக் கொண்டே சென்றது. பிள்ளையில்லை என்ற ஏக்கமும், வயதும் அதிகரித்துக் கொண்டே சென்றது. ஆனால் இன்னும் வாக்குத்தத்தம் நிறைவேறவில்லை. இச்சூழலில் சாராய் அவரசப்பட்டு, தன் அடிமைப் பெண்ணாகிய, ஆகார் மூலமாவது தனக்கு ஒரு குழந்தை பிறக்கட்டும், தன் குடும்பம் கட்டப்படட்டும் என்று ஆசைப்பட்டு, தன் கணவனாகிய ஆபிரகாமுக்கு, ஆகாரைத் திருமணம் செய்து வைக்கிறார் (ஆதி. 16:3). சாராய் எதிர்பார்த்தபடியே கருவுற்ற ஆகார், தன் எஜமானிக்கு நன்றியாய் இருப்பதை மறந்து, தன்னுள் பெருமை கொண்டு, தன் எஜமாட்டியின் வார்த்தைகளை அவமதித்து, பிள்ளையில்லாத தன் எஜமானியை அற்பமாக எண்ணத் தொடங்கினார்.



இதன் விளைவு, தன் அடிமைப் பெண்ணாகிய ஆகார் ஒரு கருவுற்ற பெண் என்று கூட நினைக்காமல், மிகவும் கடினமாக நடத்துகிறார் சாராய். ஆகாரால் தாக்குப்பிடிக்க முடியாமல், 'ஒரு அடிமை எஜமானை விட்டு ஓடுவது குற்றம்' என்று அறிந்திருந்தும், ஆகார் தன் எஜமாட்டியின் வீட்டை விட்டு ஓடிப்போகும் சூழ்நிலை வந்தது (ஆதி. 16:6). வயிற்றில் குழந்தை. எங்கே போவது? யார் தன்னை இனி ஆதரிப்பார்? என்ற கவலை! மனமெல்லாம் எப்படி இந்தக்



குழந்தையைப் பெற்றெடுக்கப் போகிறேன் என்கிற பயம். தான் எங்கே செல்கிறேன் என்ற நிச்சயமில்லாமல், சென்று கொண்டிருந்தார் ஆகார். தன் அடிமைப் பெண்ணைக் காணவில்லையே! 'வயிற்றில் பிள்ளையோடு எங்கே சென்றாள்' என எஜமாட்டியாகிய சாராய் தேடல. அடிமைப் பெண் என்றாலும், 'அவள் வயிற்றில் வளரும் குழந்தைக்கு நான் தானே தகப்பன்' என கணவன் ஆபிரகாமும் தேடல. இப்படிப்பட்ட நிலையில்தான், கர்த்தருடைய தூதனானவர், வனாந்திரத்திலே, ஒரு நீரூற்றண்டையில் ஆகாரைக் கண்டார். ஒருவரும் தேடாத ஆகாரை தேவாதி தேவன் தேடிவந்தார்.

தேடி வந்த ஆண்டவர், ஆகாரைப் பார்த்து, ஆகாரே, நீ எங்கேயிருந்து வருகிறாய்? எங்கே போகிறாய்? என விசாரித்து, 'நீ உன் நாச்சியாரண்டைக்குத் திரும்பி போய், அவள் கையின்கீழ் அடங்கியிரு' (ஆதி. 16:9) என ஆகாருக்கு ஆலோசனை சொல்கிறார். ''ஐயையோ! எஜமாட்டியிடம் சொல்லாமக் கொள்ளாம ஓடியாந்துட்டனே, இனி எப்படி ஆண்டவரே அங்க போரது! எப்படி அவங்க முகத்துல முழிக்கிறது, அவுங்க செய்ற கொடுமை தாங்க முடியல ஆண்டவரே. வேறு எங்காவது போகச் சொல்லுங்க, நான் போகிறேன்;'' என ஆண்டவரோடு வாக்குவாதம் செய்யல. ஆகார் ஆண்டவருடைய வார்த்தைக்கு அப்படியே கீழ்ப்படிந்தார். கர்த்தர் சொன்ன வார்த்தையின்படியே ஆகாரின் கர்ப்பப் பிறப்பான இஸ்மவேலை ஒரு பெரிய ஜாதியாக்கினார்.

என்னுடைய கிராம C.S.I. சபைக்கு புதிதாக, அனுபவமிக்க ஒரு ஆயர் நியமிக்கப்பட்டார். ஞாயிறு ஆராதனை முடிந்தபின், புதிய ஆயர் அவர்களுக்கு சபையாரால் வரவேற்பு வழங்கப்பட்டது. அந்நிகழ்ச்சியில், திருச்சபை மூப்பர்கள் சிலர், ஆயர் அவர்களை வரவேற்றுப் பேசினார்கள். அதில் ஒருவர், ஆயரை வரவேற்றுப்பேசி விட்டு, எங்கள் சபையார் எல்லோரும் கடுகு மாதிரி, படபடவென்று வெடிக்கக் கூடியவர்கள். ஆகவே அதற்கேற்ப ஆயரின் பணிகள் இந்தத் திருச்சபையில் இருக்க வேண்டும்; என்பது போல பேசி அமர்ந்தார். அவரது பேச்சிற்கு கர ஒலியுடன் செம வரவேற்பு.

தொடர்ந்து பேசிய ஆயர் அவர்கள் தன் ஏற்புரையின் இறுதியில், இங்கு பேசியதில் ஒருவர், சபையார் கடுகு மாதிரி என்று சொன்னார். மிக்க மகிழ்ச்சி. கடுகு போலதான் இருக்க வேண்டும். ஆனால், நான் எப்போது வாணலியில் போடுகிறேனோ அப்பதான் கடுகு படபடவென்று வெடிக்க வேண்டும். அதுவரை கடுகு என் கரத்திற்குள்தான் அடங்கியிருக்க வேண்டும் என்று தன் உரையை முடித்தார்.

வேதமும் அதைத்தான் சொல்கிறது. ''ஆகையால் ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்'' (1 பேதுரு 5:6).

## அன்புத் தம்பி, தங்கச்சி!

சொந்தக் குடும்பத்தில் ஒரு அடிமைபோல நடத்தப்படுகின்றீர்களோ?

நான் எதிர்பார்க்கும் அன்பு எனக்குக் கிடைக்கலையே எனக் கண்ணீர் வடிக்கின்றீர்களோ?

உங்கள் வாழ்வில் எங்கு போகிறோம் என்ற நிச்சயம் இல்லாதிருக்கிறதோ?

மிகக் கடினமாக நடத்தப்படுகின்றீர்களோ?

விரட்டப்பட்ட நிலையில் இருக்கின்றீர்களோ?

உங்கள் அங்கலாய்ப்பைக் கேட்க ஒருவருமில்லை என்று கலங்குகின்றீர்களோ?

யாருமே என்னைத் தேடுவதில்லை எனத் தேம்பி அழுகின்றீர்களோ?

குடும்பத்தை விட்டு ஓடிவிட நினைக்கின்றீர்களோ?

ஆகாரைத் தேடி வந்து, அவரது அங்கலாய்ப்பைக் கேட்ட, அந்த அன்புத் தகப்பன் உங்களையும் இன்று தேடி வந்திருக்கிறார். உங்கள் அருகில் தான் இப்போது இருக்கிறார். தன் எஜமாட்டியால் இரக்கமில்லாமல், கடினமாய் நடத்தப்பட்ட ஆகாரை ஆசீர்வதித்து, இஸ்மவேல் என்கிற மாபெரும் சந்ததியை உருவாக்கிய ஆண்டவர், உங்களைக் கடினமாய் நடத்தியவர்களுக்கு முன் நிச்சயம் உயர்த்தி ஆசீர்வதிப்பார்.

'உன்னால்தான் குடும்பத்திற்கு அவமானம்' என்று பெற்றோர் சொல்கிறார்களோ? 'உன்னாலதான் ரிசல்ட் போகப்போகு'துன்னு வேதனைப்படுத்துகின்றார்களோ? 'நீயெல்லாம் வாழ்ந்து என்ன சாதிக்கப்போகிறாய்?' என்று ஏளனமாக பேசுகின்றார்களோ, பலிக்கின்றார்களோ? மகளே, வீட்டை விட்டு, படிக்கின்ற பள்ளியை விட்டு அல்லது உலகத்தை விட்டே போய் விடலாம் என்று நினைக்கிறாயோ? மகனே! நீ சாகப்பிறந்தவன் அல்ல, சாதிக்கப்பிறந்தவன்.

ஆகார் தன்னை வெறுத்து, கடினமாய் நடத்திய தன் எஜமாட்டியிடம் திரும்பிச் சென்று, எப்படி அவருக்கு அடங்கிருந்து, ஆண்டவரின் ஆசீர்வாதத்தை சுதந்தரித்தாரோ? அதுபோல, உங்களை அற்பமாய் நினைக்கிறவர்களுக்கு முன் சாதிக்க வேண்டும் என்கிற வைராக்கியத்தோடு, இருக்கிற இடத்தில், உங்கள் பெற்றோருக்கு, உங்கள் ஆசிரியர்களுக்கு, உங்களுக்கு வழிகாட்டுமிடத்தில் இருப்பவர்களுக்கு, உங்களுக்கு மேலானவர்களுக்கு அடங்கியிருங்கள். ஏற்ற வேளை ஒன்று வந்துவிட்டது என்றால், இயேசு என்ற அன்புத்தகப்பன் சாதனையாளர்களாக உங்களை உயர்த்தி, உங்கள் சந்ததியை ஆசீர்வதிப்பார் ■

## அடங்கிரு!.... ஆசீர்விதிப்பார்!



# ஓடுகளம்

## எழுப்புதல் ஓட்டம்


நிகழ்வு: காலேப்

ஓடுகளம் என்கிற இந்த தொடரின் மூலம் எழுப்புதலுக்காக தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் எப்படி தங்கள் ஓட்டத்தை ஓடினார்கள், எப்படிப்பட்ட சவால்களை சந்தித்தார்கள், எப்படி அதை மேற்கொண்டார்கள் என்று பார்த்து வருகிறோம். கடந்த மாதம் ஒருவருக்கும் பிரயோஜனமில்லாமல் இருந்த குஷ்டரோகிகளை, எப்படி ஒரு தேசத்தின் பஞ்சத்தை மாற்ற பயன்படுத்தினார் என்பதை குறித்தும் அலெக்சாண்டர் சோரோகின் என்ற மாரத்தான் வீரரின் 7 உலக சாதனைகளையும் பார்த்தோம்.




2021ம் ஆண்டில் முதல் 6 மாதங்கள் கொரோனா ஊரடங்கால் உலகளவில் மாரத்தான் போட்டிகள் தடைப்பட்டன. பின்பு ஊரடங்கு தளர்வுகள் ஏற்பட்ட பின்பு, தொடர்ச்சியாக மாரத்தான் போட்டிகள் அறிவிக்கப்பட்டன. உலகிலேயே 6 பெரிய மாரத்தான் ஓட்டங்களாக கருதப்படும் பெர்லின், லண்டன், சிக்காகோ, பாஸ்டன், டோக்கியோ மற்றும் நியூயார்க் மாரத்தான் போட்டிகள் தொடர்ச்சியாக 6 வாரங்களில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. அப்படியென்றால் ஒவ்வொரு ஓட்டத்திற்கும் 5 நாட்கள் மட்டுமே இருக்கும். இது அநேக வீரர்களுக்கு சவாலாகவும், சாத்தியமில்லாததாகவும் தோன்றியது. ஆனால் அமெரிக்க நாட்டை சேர்ந்த 40 வயதான தொடர் ஓட்ட வீராங்கனையாகிய Shalance Flanagan இந்த சவாலை ஏற்று, 6 போட்டிகளிலும் கலந்து கொள்ள முடிவெடுத்தார். இவர் 2020ம் ஆண்டில் தான் ஓய்வு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. அநேக சவால்களை சந்தித்த போதும், 6 வாரங்களில் 6 மாரத்தான்களை ஓடி முடித்து சாதனை படைத்துள்ளார். இதில் பாஸ்டன் மற்றும் சிக்காகோ மாரத்தான் போட்டிக்கு இடையே ஒரு நாள் மட்டுமே இடைவெளி இருந்தது. இவர் 6 வாரங்களில் 253 கி.மீட்டர் தூர மாரத்தானை 15 மணி நேரம் 49 நிமிடங்களில் ஓடி முடித்து இன்று வளர்ந்து வரும் மாரத்தான் வீரர்களுக்கு பயிற்சியும் அளித்து வருகிறார்.

Shalance Flanaganஐ பற்றி வாசிக்கும் பொழுது, வேதத்தில் உள்ள ஒரு நபர் நினைவிற்கு வருகிறார். எலியா என்கிற தீர்க்கதரிசி தேவனால் வல்லமையாக பயன்படுத்தப்பட்டவர். எலியாவின் தீவிரமான ஓட்டம் தேவனுக்காக பெரிய காரியங்களைச் செய்ய வைத்தது.



## இரதத்தை மிஞ்சின ஓட்டம்

“கர்த்தருடைய கை எலியாவின்மேல் இருந்ததினால், அவன் தன் அரையைக் கட்டிக்கொண்டு, யெஸ்ரயேல் வரும் மட்டாக ஆகாபுக்குமுன் ஓடினான்” (1 இராஜா. 18:46). கர்மேல் பர்வதத்தில் கர்த்தரின் அக்கினியை இறக்கி, பாகாலின் தீர்க்கதரிசிகளை சங்கரித்தவர் எலியா. ஒரு பெரிய எழுப்புதலை இஸ்ரவேல் ஜனங்கள் நடுவில் உண்டாக்கினவர். ஆனால் எலியாவின் வேலை அதோடு முடியவில்லை, இஸ்ரவேலின் மேல் மழை பொழிய

எலியா ஜெபிக்க வேண்டியிருந்தது. அவர் ஏழு முறை ஜெபித்த பின்பு உள்ளங்கையளவு மேகம் எழும்பியது, மூன்றரை ஆண்டுகள் மழையே இல்லாமல் வறண்டிருந்த தேசத்தில் ஆசீர்வாதமான மழை பெய்தது. எந்த ஒரு குறுக்கு வழியில் ஓடினாலும் ஒரு மனிதனால் இந்த மழை வருவதற்கு முன் எலியா இஸ்ரயேலுக்கு, ஆகாபின் இரதத்திற்கு முன் ஓட வேண்டும். இன்றைக்கும் நம் தேசத்தின் மீது எழுப்புதலின் மேகம் சூழ்ந்திருக்கிறது. பெரும் மழையின் இரைச்சல் கேட்கிறது, எழுப்புதல் சமீபமாக உள்ளது. திரளான ஜனங்கள் ஜீவனுள்ள தேவன் பக்கம் திரும்ப போகிறார்கள். இந்த எழுப்புதலில் தேவன் உங்களுக்கு ஒரு ஓட்டத்தை நியமித்திருக்கிறார். குதிரையை விட வேகமாக ஓட முடியாது. ஆனால் கர்த்தரின் கரம் எலியாவின் மீது இருந்ததினால் அவர் இரதத்தை முந்தி ஓடினார். இன்றைக்கும் நம் தேசத்தின் மீது எலியாவை போல ஓய்வில்லாத ஓட்டம் நமக்கு இருக்கிறது. சுவிசேஷத்தை அறிவிக்க, இயேசுவை அறியாத ஜனங்கள் இயேசுவை அறிந்து கொள்ள நாம் தீவிரமாக செயல்பட வேண்டியுள்ளது. அந்த ஓட்டத்தில் நாம் ஓட வேண்டுமென்றால் கர்த்தருடைய கரம் நம் மேல் இருக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் நாம் எப்போதும் அரையைக் கட்டிக் கொண்டு ஆயத்தமாக காத்திருக்கும் போதுதான் கர்த்தர் நம்மை பயன்படுத்த முடியும்.

## 40 நாள் தொடர்ச்சியான பயணம்

எலியா கர்த்தருக்காக செய்த அத்தனை காரியங்களிலும் வெற்றி பெற்றார். ஆனால் 1 இராஜாக்கள் 19ம் அதிகாரத்தில் யேசபேலின் மிரட்டலுக்கு பயந்து, வனாந்திரத்தை நோக்கி ஓடினார். தொடர்ந்து வெற்றிகளையே பார்த்திருந்த எலியாவிற்கு இது சற்று அதிர்ச்சியை அளித்தது. இதை தாங்க முடியாமல் சோர்ந்து போய் ஒரு சூரை செடியின் கீழ் படுத்துக்கொண்டார். நம் வாழ்விலும் எதிர்பாராத ஒரு சம்பவம் நடக்கும்போது, சோர்ந்து போய் ஜெபிக்காமல், வேதம் வாசிக்காமல், கர்த்தருடைய சமூகத்திற்கு போகாமல் இருப்போம். எலியாவிற்கும் இப்படி ஒரு சூழ்நிலை தான். அப்பொழுது கர்த்தருடைய தூதன் எலியாவிற்கு 2 முறை போஜனம் கொடுத்து பெலப்படுத்தினார். அந்த போஜனத்தின் பெலத்தினால் 40 நாள் இரவும் பகலும் நடந்து ஓரேப் என்னும் பர்வதம் மட்டும் வந்து சேர்ந்தார். இங்கு போஜனம் என்பது கர்த்தருடைய வார்த்தையையும், வாக்குத்தத்தையும் குறிக்கிறது. ஓரேப் என்பது தேவ சமூகத்தையும், தேவனுடைய திட்டங்களை அறிந்து கொள்கிற இடமாகவும் இருக்கிறது (எரிகிற முட்செடியில் மோசேயை தேவன் சந்தித்த இடம், மோசே பத்து கட்டளைகளைப் பெற்றுக் கொண்ட இடம்). எலியா ஓரேபிற்கு வந்த பின்பு, கர்த்தர் அவரை விசாரித்து, பெலப்படுத்தி, அவர் செய்ய வேண்டிய காரியங்களை, அதற்கான திட்டங்களைத் தந்து மீண்டும் ஓட வைத்தார். பிரச்சனைகள், போராட்டங்கள் நம் வாழ்வில், ஊழியத்தில் வரும் போது நாம் போக வேண்டிய இடம் சூரை செடியல்ல, மாறாக வாக்குத்தத்தமான போஜனத்தைப் பிடித்துக் கொண்டு, ஓரேப் பர்வதமாகிய தேவ சமூகத்திற்கு நாம் செல்லும்போது, கர்த்தர் நம்மை ஓட வைப்பார். எலியா தன் ஸ்தானத்தில் எலிசா என்கிற தீர்க்கதரிசியை ஏற்படுத்தி, மரணத்தை காணாமல் மேலே எடுத்துக் கொள்ளப்பட்டார்.

**அன்பு வாலிபர்களே! இந்த கடைசி கால எழுப்புதலில் பல எலியாக்கள் எழும்ப வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ஒருவேளை நீங்கள் "தற்போது இருக்கும் சூழலில் என்னால் எப்படி தேவனுக்காக எழும்ப முடியும், எனக்கே அநேக பலவீனங்கள் இருக்கிறது, அடிக்கடி சோர்ந்து போகிறேன், வேதம் வாசிக்கத் தவறுகிறேன், என்னால் எப்படி எழுப்புதலில் ஓட முடியும்" என்று நினைக்கிறீர்களா? யாக்கோபு 5:17ம் வசனத்தில், 'எலியா நம்மை போல பாடுள்ள மனிதராக இருந்தார்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட எலியாவை தேவன் பெலப்படுத்தி பயன்படுத்தி பெரிய காரியங்களை செய்தார் என்றால் உங்களையும் பலப்படுத்தி பயன்படுத்தி தேசத்தையே அசைக்க முடியும். அதற்கு நீங்கள் ஓரேப் என்கிற தேவ சமூகத்திற்கு செல்ல வேண்டும், அவரிடத்திலிருந்து பெலனையும், வல்லமையையும் பெற்று கொள்ள வேண்டும். நிச்சயமாக எழுப்புதலில் பெரிய ஓட்டம் உங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது ■**



# Coffee With பத்திரிக்கையாளர்

# புத்தியுள்ள ஸ்திரீ



பேசலாம் வாங்க: வயலா

பரிசுத்த வேதாகமத்தில் பெயர் குறிப்பிடப்படாமல் தனது செய்கையினால் அறியப்பட்ட நபர்கள் பலர் உண்டு அவர்களுள் 2 சாமுவேல் 20ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள 'புத்தியுள்ள ஸ்திரீ' குறிப்பிடத்தக்கவர். யார் இந்த புத்தியுள்ள ஸ்திரீ? என்று தானே சிந்திக்கிறீர்கள். இவர் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேல் தேசத்தில், தாவீது ராஜாவின் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தவர். இந்த பெண் தனது ஞானம், சிந்தனைத் திறன் பேச்சுத் திறமை மற்றும் தைரியத்தால் தாவீது ராஜாவின் இராணுவத் தலைவனாகிய யோவாபோடும், நகரத்து மக்களோடும் புத்தியாய் பேசி நகரத்திற்கு வர இருந்த பேரழிவைத் தடுத்து தனது ஜனங்களைப் பாதுகாத்த பெருமைக்குரியவர்.

**இந்த புத்தியுள்ள பெண்மணியை நம்முடைய பத்திரிக்கையாளர் கண்டுபிடித்து அவரோடு உரையாடி இருப்பாரானால் எப்படி இருந்திருக்கும் என்பதின் கற்பனைத் தொகுப்பை கீழேக் காண்போம்.**

**பத்திரிக்கையாளர்:** வணக்கம் அக்கா!

**புத்தியுள்ள ஸ்திரீ:** ம், வணக்கமுங்க.

**பத்தி:** உங்களைப் பற்றி கொஞ்சம் சொல்றீங்களா, அக்கா!

**பு.ஸ்திரீ:** நான் இஸ்ரவேல் தேசத்தில் தாவீது அரசனின் காலத்தில் என் ஜனங்களோடு அமரிக்கையாய் வாழ்ந்தவள்.

**பத்தி:** அக்கா, நீங்கள் 'புத்தியுள்ள ஸ்திரீ' என்று பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளீர்கள். எவ்வாறு இந்த சிறப்பு பெயரினை நீங்கள் பெற்றீர்கள். அதன் பின்னணி பற்றிக் கூற முடியுமா?

**பு.ஸ்திரீ:** ம் கூறுகிறேன்... நான் எப்பொழுதும் வீட்டுக்குள் இருந்தாலும், வீட்டு வேலைகளில் கவனம் செலுத்தினாலும் வெளி நடப்புகளை கூர்ந்து கவனித்து அறிகிறவளாய்



இருப்பேன். அவ்வாறு ஒருமுறை பெத்மாக்காவாகிய ஆபேல் பட்டணத்தில் நாங்கள் இருக்கையில், இஸ்ரவேல் தேசத்தில் தாய் பட்டணம் போல் இருக்கும். எங்கள் பட்டணம் புறஜாதியாரால் அல்ல, எங்கள் தேசத்தின் இராணுவத் தலைவனாலே முற்றுகை போடப்பட்டிருப்பதை அறிந்து ஆச்சரியமுற்றேன்.

**பத்தி:** பட்டணம் முற்றுகை போடப்பட்டிருந்ததினால் நீங்கள் பயமடைந்தீர்களா? மனம் பதற்றமாக இருந்ததா?

**பு.ஸ்திரீ:** என் மனம் பதறவும் இல்லை, பயமடையவும் இல்லை. மாறாக என் தேசத்தை பாதுகாக்க வேண்டிய இராணுவத் தலைவனே பட்டணத்தின் அலங்கத்தை விழப்பண்ண எத்தனம் பண்ணுவதினால் ஏதோ உள்நாட்டுக் காரணம் என்பதை உணர்ந்துக் கொண்டேன்.

**பத்தி:** இராணுவத் தலைவனாகிய யோவாபை உங்களுக்கு முன்னமே தெரியுமா?

**பு.ஸ்திரீ:** அவரைப் பற்றி நிறையக் கேள்விபட்டிருக்கிறேன். வாளுடனேயே பிறந்தவர் போல, போர்கள் புரிவது என்பது அவருக்கு அதிக பிரியம். சிறந்த வீரன், மனதைரியம் அதிகம் உடையவர். உயிர்கள் பலி ஆவதும், இரத்தம் சிந்தப்படுவதும் அவருக்கு சாதாரண விஷயம். ஆனால் எங்களுக்கோ அது தாங்க முடியாத விஷயம். எனவே எப்படியாவது அவரை சந்தித்து பேச விரும்பினேன். என்னுடைய வேண்டுதலுக்கு அவரும் செவி கொடுத்தார்.

பத்தி: ம்... அப்புறம் என்ன நடந்தது அக்கா?

**பு.ஸ்திரீ :** இஸ்ரவேலில் தாய் பட்டணமாயிருக்கிறதை நிர்மூலமாக்கப் பார்க்கிறீரோ? நீர் கர்த்தருடைய சுதந்தரத்தை விழுங்க வேண்டியது என்ன? என்று கேட்டேன். நான் கேட்டதற்கு அவர் கோபப்படுவாரோ என்று அஞ்சினேன். ஆனால் யோவாபோ கோபப்படாமல் பதில் கூறினார்.

பத்தி: அப்படியா? இராணுவத் தலைவரை எதிர்த்துக் கேள்வி கேட்டும், அவர் கோபப்படவில்லையா? ஆச்சரியமாக இருக்கிறதே! என்ன பதில் கூறினார்?

**பு.ஸ்திரீ :** ம்... சொல்றேன் இஸ்ரவேல் தேசத்தை ஆளும்படி தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்டு, அபிஷேகிக்கப்பட்ட தாவீது ராஜாவுக்கு விரோதமாக சேபா என்னும் பேலியாளின் மனுஷன் எழும்பி இருக்கிறான். அவன் இந்த பட்டணத்திற்குள் தான் இருக்கிறான். அவனை மாத்திரம் ஒப்புக் கொடுத்தால், பட்டணத்தை விட்டு போவேன் என்று கூறினார். நான் சிந்தித்து பார்த்தேன். அந்த ஒரு மனிதனை ஒப்புக் கொடுக்காவிட்டால், பட்டணத்தின் அலங்கம் விழும். அதினால் அநேக மனித உயிர்களும், கால்நடைகளும் கொல்லப்படலாம். அப்பாவி உயிர்களின் இரத்தம் அநியாயமாய் சிந்தப்படலாம். அநேக உயிர் சேதமும், பொருள் சேதங்களையும் தவிர்க்க வேண்டுமானால் இந்த ஒரு மனிதனை ஒப்புக் கொடுப்பதில் தவறில்லை. மேலும் அவனோ பேலியாளின் மனுஷன், தாவீது ராஜாவுக்கு விரோதமாய் கையை ஓங்கியவன், அவனை விட்டு வைத்தால் தேசத்தின் சமாதானம் பாதிக்கப்பட்டுக் கொண்டேதான் இருக்கும். எனவே அவன் தலை மதிலின் மேல் இருந்து போடப்படும் என்று வாக்குக் கொடுத்தேன்.

பத்தி: **Wow!** சூப்பர் அக்கா! உங்கள் பின் விளைவுகளை யோசிக்கும் **High Light**யே உங்கள் சிந்தனைத் திறனும், தைரியமும் தான் அக்கா... அப்புறம் என்ன நடந்திச்சி?

**பு.ஸ்திரீ :** இவ்வளவு பின் விளைவுகளையும் என் ஜனங்களிடம் போய் விவரித்தவுடன், அவர்களே பிக்கிரியின் குமாரனாகிய சேபாவின் தலையை வெட்டி யோவாபிடம் போட்டு விட்டார்கள். உடனே எக்காளம் முழங்கும் சத்தம் கேட்டது. பட்டணத்தை சுற்றியிருந்த முற்றுகை கலைக்கப்பட்டது. அப்பாடா! அப்புறம் தான் எங்களுக்கு நிம்மதி பெருமூச்சே வந்தது. விடுதலையோடு வெளியே உலாவினோம்.

பத்தி: சபாஷ் அக்கா! ஒரு துஷ்ட மனிதனை அழித்து, எத்தனையோ இழப்புகளைத் தவிர்த்து, முழு பட்டணத்தையும் அழிவிலிருந்து தப்புவித்த செயல் உண்மையிலேயே மிகவும் பாராட்டத்தக்கது அக்கா!



**பு.ஸ்திரீ :** மிக்க நன்றி

பத்தி: நீங்க எங்க வாலிப பிள்ளைகளுக்கு என்ன சொல்ல விரும்புறீங்க, அக்கா?

**பு.ஸ்திரீ :** வாலிபச் செல்லங்களே, கர்த்தருக்கு விரோதமான காரியம் ஏதாவது உங்களுக்குள் இருக்குமானால், எப்படி பிக்கிரியின் குமாரனாகிய சேபாவின் தலையை துண்டித்து தூக்கி எறிந்தார்களோ, அவ்வாறே தூக்கி எறிந்து விடுங்கள். அது நல்லொழுக்கங்களைக் கெடுக்கும் ஆகாத சம்பாஷணைகளோ, கர்த்தருக்கு பிரியமில்லாத உறவுகளோ, தீய நட்போ, மாம்ச சிந்தையோ எதுவாக இருந்தாலும் உங்கள் சுயாதீன வாழ்க்கையை முற்றுகைப் போட்டு, அடிமை வாழ்வு வாழ செய்யும். ஒரு சிறிய பாவம் நிம்மதியை, சமாதானத்தை இழக்க செய்து சரீரத்திற்கும், ஆத்துமாவிற்கும் அழிவைக் கொண்டு வரும். உன் கண், கை, கால் உனக்கு இடறல் உண்டாக்கினால் அதை தறித்துப் போடு. இரண்டு கண்கள், கைகள், கால்களோடு நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், குருடனாய், ஊனனாய், சப்பாணியாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது நலம் என்று இயேசுவே கூறியிருக்கிறார் (மாற்கு 9:43-47). ஏதோ ஒரு பாவத்தினால் நீங்கள் எப்பேர்ப்பட்ட பயமுறுத்தல்களையோ, மிரட்டல்களையோ சந்தித்து கொண்டு இருப்பீர்களானால், இன்று கர்த்தரிடம் ஒப்புக் கொடுங்கள். உங்களைக் கட்டி வைத்திருக்கும் பிசாசு தானே விலகி விடுவான், அழிவுகள் தவிர்க்கப்படும். சந்தோஷமும் சமாதானமும் உங்களை சூழ்ந்துக் கொள்ளும். நீங்களும் 'புத்தியுள்ளவர்கள்' என்று எல்லாராலும் அழைக்கப்படுவீர்கள்.

**ஆண்டவருக்கு பயப்படுவதே ஞானம்**
**"பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி!"**

பத்தி: சரியாக சொன்னீங்க அக்கா. நீங்கள் புத்தியுள்ள ஸ்திரீ என்று புகழப்பட்டதோடு எங்கள் பிள்ளைகளையும் புத்தியுள்ளவர்களாய் மாற்ற அறிவுரை கூறியதற்கு நன்றி அக்கா!

**பு.ஸ்திரீ :** நன்றி விடைபெறுகிறேன்.

# செய்திகள்!

## கனடாவில் பறந்த மர்ம பொருள் சுட்டு வீழ்த்திய அமெரிக்கா பலூன்களால் தொடரும் பீதி!



கனடா வான்வெளியில் பறந்த மர்ம பொருளை அமெரிக்காவின் எப்-22 விமானம் சுட்டு விழ்த்தியதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் மொன்டானா மாகாணத்தில் உள்ள அணு ஆயுத பாதுகாப்பு தளத்தின் மீது கடந்த பிப்ரவரி 1ம் தேதி பறந்த சீனாவின் ராட்சத உளவு பலூனை அமெரிக்கா சுட்டு வீழ்த்தியது. இதேபோல், கடந்த 4ம் தேதி கனடாவின் அலாஸ்கா எல்லையின் வான்பரப்பில் 40,000 அடி உயரத்தில் பறந்த மர்ம பொருளை அமெரிக்காவின் எப்-22 விமானம் சுட்டு வீழ்த்தியது. உளவு பார்ப்பதற்காக சீனா மர்மபலூனை பறக்க விட்டதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

ஆனால் இதனை மறுத்துள்ள சீனா வானிலை ஆய்வுக்காக பலூன் பறக்கவிட்டதாகவும், அதனை அமெரிக்கா சுட்டு வீழ்த்தியது சர்வதேச விதிகளை மீறிய செயல் எனவும் தெரிவித்துள்ளது. இதனை ஏற்க மறுத்துள்ள அமெரிக்கா சீனாவை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளதுடன், அமெரிக்காவில் உள்ள சீனாவை சேர்ந்த 6 விமான தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு தடை விதித்துள்ளது குறிப்பிடத் தக்கது.

இந்த விவகாரத்தால் அமெரிக்கா, சீனா இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், கனடாவின் வடமேற்கு பகுதியான யூகோன் மாகாண வான் எல்லை மீது பறந்த உருண்டை வடிவ மர்ம பொருளை அமெரிக்காவின் எப்-22 பாதுகாப்பு விமானம் நேற்று சுட்டு வீழ்த்தியது.

இது தொடர்பாக ஜஸ்டின் ட்ரூடோ தனது ட்விட்டர் பக்கத்தில், "கனடா நாட்டின் வடமேற்கு பகுதியில் யூகோன் மாகாணத்தின் வான்பகுதியில் மர்ம பொருள் பறப்பதாக வடஅமெரிக்க விண்வெளி பாதுகாப்பு அமைப்பு எங்களுக்கு தகவல் கொடுத்தது. இதையடுத்து அந்த மர்ம பொருளை சுட்டு வீழ்த்த உத்தரவிட்டேன். கனடா, அமெரிக்க விமானங்கள் அந்த மர்ம பொருளை சுட்டு வீழ்த்தும் முயற்சியில் ஈடுபட்டன. அப்போது அமெரிக்காவின் எப்-22 விமானம் கனடா வான்வெளியில் பறந்த மர்ம பொருளை சுட்டு வீழ்த்தியது.

இது குறித்து அமெரிக்க அதிபர் ஜோ பைடனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினேன். யூகோன் பகுதியில் சுட்டு வீழ்த்தப்பட்ட பொருளின் பாகங்களை சேகரித்து, ஆய்வு செய்யும் பணிகளை கனடா மேற்கொள்ளும். மர்ம பொருள் பற்றி தகவல் கூறிய வட அமெரிக்க விண்வெளி பாதுகாப்பு அமைப்புக்கு நன்றி" இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"கடந்த வாரம் அமெரிக்காவில் பறந்த சீனபலூனை விட இந்த உருண்டை வடிவ மர்ம பொருள் சிறியதாக இருந்தது" என கனடா பாதுகாப்புத்துறை அமைச்சர் அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார் - தினகரன், பிப்ரவரி 13, 2023.

## உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வர, இந்தியா எடுக்கும் முயற்சிகளை வரவேற்போம்! வெள்ளை மாளிகை அறிவிப்பு!

உக்ரைன், ரஷ்யா இடையேயான போரை முடிவுக்கு கொண்டு வர இந்தியா எடுக்கும் எந்தவொரு முயற்சியையும் அமெரிக்கா வரவேற்கும் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்கா தேசிய பாதுகாப்பு கவுன்சில் செய்தி தொடர்பாளர் ஜான் கிர்பி அளித்துள்ள பேட்டியில், "ரஷ்யா-உக்ரைன் போருக்கு புடின் தான் காரணம். போரை நிறுத்த அவருக்கு இன்னும் நேரம் இருக்கிறது என நினைக்கிறேன். ஆனால் அவர் அதை செய்யாமல் தொடர்ந்து போரிட்டு வருகிறார். இருநாடுகளிடையேயான போர் முடிவுக்கு வர வேண்டும். பேச்சு வார்த்தை நடத்த உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி முன்வர வேண்டும். போரை நிறுத்த புடின் முன்வராததால் நாங்கள் உக்ரைனுக்கு ராணுவ உதவி செய்கிறோம். இந்திய பிரதமர் மோடியால் புடினை சமாதானம் செய்ய முடியும். புடினுடன் பேசும்படி மோடியை நாங்கள் வலியுறுத்துவோம். உக்ரைன் ரஷ்ய போரை நிறுத்த பிரதமர் மோடி எடுக்கும் எந்தவொரு முயற்சியையும் அமெரிக்கா நிச்சயம் வரவேற்கும் என்றார் - தினகரன், பிப்ரவரி 13, 2023.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# தேவனால் பெலப்பட்டவர்கள்...

## தாவீது - விசுவாசத்தினால் வந்த பெலன்



இஸ்ரவேல் ஜனங்கள் ஒரு ராட்சதனை எதிர்கொள்ள வேண்டியதாயிருந்தது. அவன் நாள்தோறும் இஸ்ரவேல் சேனைக்கு முன்பாக வந்து நின்று அவர்களை பயமுறுத்தினான். அவனுடைய அச்சுறுத்தும் வார்த்தைகளைக் கேட்டு, கர்த்தரை நோக்கிப் பார்ப்பதற்கு பதிலாக அவனுடைய உருவத்தை பார்த்ததால், அவனுக்கு எதிராக போராட தைரியம் வரவில்லை. கோலியாத்தை வீழ்த்த தேவன் மீது நம்பிக்கையுடைய ஒரு சிறுவன் தேவைப்பட்டான்.

தாவீது கோலியாத்திற்கு விரோதமாக யுத்தம் செய்யும் போது அவனிடம் போர் செய்வதற்கான உடல் பெலமோ, அல்லது போர் செய்வதற்கான கருவிகளோ எதுவும் இல்லாதிருந்தான். கர்த்தருடைய பெலத்தைக் கொண்டு அவரை மட்டுமே சார்ந்திருந்ததினால், அவனிடமிருந்த ஒரு கூழாங்கல்லால் சத்துருவை வீழ்த்த முடியும் என்ற விசுவாசம் அவனுக்குள் இருந்ததால், கோலியாத்தை வீழ்த்தி வெற்றி கண்டான்.



**விசுவாசத்தினால் ராட்சதனை வீழ்த்த சிறுவன் தாவீதை பெலப்படுத்தின தேவன் உங்களை விசுவாசத்தில் பெலப்படுத்தமாட்டாரா? (1 சாமு. 17:45-50).**



## சிம்சோன்

### தேவனுடைய இரக்கத்தினால் வந்த பெலன்

பெலிஸ்தியரிடமிருந்து இஸ்ரவேலரை விடுவிக்க தேவன் சிம்சோனைத் தெரிந்து கொண்டார். இஸ்ரவேலரை அடிமைப்படுத்திய பெலிஸ்தியரை அவ்வப்போது தண்டித்து அழித்து வந்தான். அவனது தவறான சகவாசத்தால் பெலிஸ்தியரிடம் பிடிபட்டார். இவனது கண்கள் பிடுங்கப்பட்டு, இரண்டு பெரிய தூண்களிடையே நிறுத்தப்பட்டான். பெலிஸ்தியர்கள் இவனை கேலிப் பொருளாக்கினார்கள். அந்நேரத்தில் சிம்சோன் தேவனிடம் மன்றாடி பலத்தைப் பெற்று பல நூறு பெலிஸ்தரைக் கொன்று தானும் மடிந்தான். கர்த்தர் சிம்சோனின் மன்றாட்டைக் கேட்டு இரங்கி, பெலன் கொடுத்தார்.

**சிம்சோன் செய்த பாவத்திற்கு தேவனிடம் மன்றாடிய போது, தேவன் இரக்கம் காட்டி பெலன் கொடுத்தது போல, உங்களை பெலப்படுத்தமாட்டாரா? (நியா. 16:28-30).**



Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 02 -2023
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

# வாலிபர் எழுப்புதல் கூடுகை

## ஆந்திரா மாநிலம், குப்பத்தில்

**மார்ச் 26**, ஞாயிற்றுக்கிழமை

நேரம் : மாலை 5 முதல் 8 மணி வரை

இடம் : Love Gospel Ministries, Kuppam,

*செய்தியும் ஜெபமும்:* **சகோ. அவினாஷ்**

தொடர்புக்கு : 9791444788 I 9492381258

## கள்ளக்குறிச்சி - கல்வராயன்மலையில்...

**ஏப்ரல் 2**, ஞாயிற்றுக்கிழமை

நேரம் : மாலை 6 மணி முதல் 9 மணி வரை

இடம் : சமுதாயக் கூடம்,
இந்தியன் வங்கி அருகில், வெள்ளிமலை

*செய்தியும் ஜெபமும்:* **சகோ. சதீஷ் குமார்**

தொடர்புக்கு : 9442885315

## காஞ்சிபுரத்தில்...

**ஏப்ரல் 14**, வெள்ளிக்கிழமை

நேரம் : மாலை 4 மணி முதல் 7 மணி வரை

இடம் : S.S. மஹால், ஓரிக்கை ரோடு
காஞ்சிபுரம்

*செய்தியும் ஜெபமும்:* **சகோ. அவினாஷ்**

தொடர்புக்கு : 9488475315

## தாராபுரத்தில்....

**ஏப்ரல் 14**, வெள்ளிக்கிழமை

நேரம் : காலை 9 மணி முதல் 1 மணி வரை

இடம் : சிவரஞ்சனி மஹால்
உடுமலை ரோடு

*செய்தியும் ஜெபமும்:* **சகோ. சதீஷ் குமார்**

தொடர்புக்கு : 9442082200 / 9944360222

## ஈரோட்டில்...

**ஏப்ரல் 23**, ஞாயிற்றுக்கிழமை

நேரம் : மாலை 3 மணி முதல் 6 மணி வரை

*செய்தியும் ஜெபமும்:*

**சகோ. அவினாஷ்**

தொடர்புக்கு : 9750722000

## திருச்சியில்...

**ஏப்ரல் 16**, ஞாயிற்றுக்கிழமை

நேரம் : மாலை 3 மணி முதல் 6 மணி வரை

*செய்தியும் ஜெபமும்:*

**சகோ. சதீஷ் குமார்**

தொடர்புக்கு : 9489775075



